செந்தமிழ்க் காவலர் சிதம்பரநாதனார் சிந்தனைத் திறம்

டாக்டர் **அ. சிதம்பரநாதன் செட்டியார்**
அறக்கட்டளைச் சொற்பொழிவு

சொற்பொழிவாளர்

செ. வைத்தியலிங்கன்
பதிப்பாசிரியர்,
பெருஞ்சொல்லகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

நாள்

4—3—1989

பிற்பகல் மணி : 3-00

...ல்கலைக்கழகம்

C-:6:4
N59
132983

485|89

செந்தமிழ்க் காவலர் சிதம்பரநாதனார் சிந்தனைத் திறம்

445

டாக்டர் **அ. சிதம்பரநாதன் செட்டியார்**
அறக்கட்டளைச் சொற்பொழிவு

சொற்பொழிவாளர்
செ. வைத்தியலிங்கன்
பதிப்பாசிரியர்,
பெருஞ்சொல்லகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்

நாள்
4—3—1989
பிற்பகல் மணி : 3-00

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

ISBN—81—7090—125—1

O-,6:8
N89

132983

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 106

திருவள்ளுவர் ஆண்டு 2020 மாசி — மார்ச்சு 1989

நூல் : செந்தமிழ்க் காவலர் சிதம்பரநாதனார் சிந்தனைத் திறம்

ஆசிரியர் : செ. வைத்தியலிங்கன்

பதிப்பு : முதற்பதிப்பு

விலை : உரூ. 6-00

அச்சு : மீரா அச்சகம்
6, கணேஷ்நகர் 4ஆம் வீதி
புதுக்கோட்டை 622 001

செந்தமிழ்க் காவலர் சிதம்பரநாதனார் சிந்தனைத் திறம்

திருக்கோயில்கள் நிறைந்த கும்பகோணத்தில் சைவத்திரு. அ. அமிர்தலிங்கம் செட்டியாருக்கும் பார்வதியம்மையாருக்கும் புதல்வராய்ச் சிதம்பரநாதன் 3-4-1907இல் பிறந்தார்; படிப்படியே மதிநலத்துடன் வளர்ந்து, தம் சீரிய முயற்சியால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் எம். ஏ. பட்டமும், தமிழிலே ஆராய்ச்சி புரிந்து முதன்முதலாக டாக்டர் பட்டமும் பெற்றார். தாம் புரிந்த தமிழ்த் தொண்டுக்காகத் தருமபுர ஆதீனத்தில் இவர் 'செந்தமிழ்க் காவலர்' என்ற சிறப்புப் பட்டம் பெற்றார்; அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பல்லாண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகவும், சில மாதங்கள் இடைக்காலத் துணைவேந்தராகவும் பணியாற்றி அறிஞர்கள் பலரால் பாராட்டப் பெற்றார். மதுரை தியாகராசர் கல்லூரியில் முதல்வராகப் பொறுப்பேற்று அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்டார். பதினான்கு ஆண்டுகள் இவர் மாநிலத் தமிழாசிரியர் கழகத் தலைவராயிருந்து தமிழாசிரியர்கள் நல்வாழ் விற்கும் ஏற்றத்திற்கும் பெருந்தொண்டு புரிந்தார். தமிழ்மொழி நலத்திற்காகவும் பண்பாட்டுப் பரவுதலுக்காகவும் சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, சுவிட்சர்லாந்து, சோவியத்துநாடு முதலிய நாடுகளுக்குச் சென்று பணியாற்றித் திரும்பினார்; அந்நிலையில் இவர், பண்பாட்டுத்தூதராக மதிக்கப்பட்டார். சாகித்திய அகடமியிலும், தமிழ் நலத்திற்கென அமைந்தபல்வேறு குழுக்களிலும் பொறுப்புக்களேற்று மொழியுயர் விற்காகத் தொண்டாற்றிப் பெருமை பெற்றார். இத்தகைய சீராளரின் சீரிய சிந்தனைகள் சிலவற்றை இவர் எழுதியுள்ள நூல் சிலவற்றின் வாயிலாகப் புலப்படுத்த முற்படுவதே இக்கட்டுரையின் உட்கிடை.

செந்தமிழ்க் காவலரின் நூல்கள்

டாக்டர் அ. சிதம்பரநாதனார் பல்லோரும் பாராட்டும் வகையில் ஆய்வு நோக்கில் நயம்படச் சொற்பொழிவாற்றும் திறமை

மிக்கவர் என்பது தமிழ் நாடறிந்த செய்தி. பேச்சாற்றலுக்கு இணையாகக் கட்டுரையாற்றலும் படைத்தவர் பேராசிரியர் என்பதற்கு நூல்கள் சான்று பகரும். இவர் எழுதி வெளிவந்த நூல்கள் வருமாறு:

1. கட்டுரைக் கொத்து
2. தமிழ் காட்டும் உலகு
3. பெரியார் மன்றோ
4. புக்கர் தி வாசிங்டன்
5. முன்பனிக் காலம்
6. தமிழோசை
7. மன்னுயிர்க் கன்பர்
8. வீட்டுத் திருமகள்
9. உழைப்பால் உயர்ந்த ஒருவன்
10. இளங்கோவின் இன்கவி
11. இந்தியச் சரித்திர மாலை
12. Advanced Studies of Tamil Prosody

இவர் காலமானபின் பிலோமினா பதிப்பகம் ஆர்வமுடன் இவரின் கருத்தோவியங்களைக் கீழ்க்காணும் இருநூல்களாக வெளியிட்டுள்ளது.

1. செங்கோல் வேந்தர்
2. தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்

இவர் தொகுத்த நூலாகிய 'சிறுகதைக் களஞ்சியம்' சாகித்திய அகடமி வெளியீடாக அமைந்துள்ளது.

இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய காலத்தில் பதிப்பித்த நூல்கள் சில உண்டு. பதிப்பு நோக்கில் காண்கையில், இவர் சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில் தலைமைப் பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்று வெளியிட்ட 'சென்னைப் பல்கலைக் கழக ஆங்கிலம்-தமிழ்ப் பேரகராதி' என்பது பெரும் போற்றுதலுக்குரியதாகும்.

தமிழ் நூல்கள் சிலவற்றிற்கு ஆராய்ச்சிச் செறிவுடன்

முன்னுரைகள் எழுதியுள்ளார். மகாவித்துவான் இராகவையங்கார் எழுதிய 'குறுந்தொகை விளக்கம்' எனும் நூலுக்கு இவர் வரைந்துள்ள முன்னுரையைச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

பல்லாற்றானும் தமிழ் நலத்திற்காகப் பெரிதும் தொண்டாற்றிய பேராசிரியரின் சிந்தனைத் திறத்தைச் சில கோணங்களில் நின்று ஆராய்ந்து மகிழலாம். இத்தகைய நோக்கில் சிறிது காண்போம்.

சிதம்பரநாதனாரின் உலகளாவிய சிந்தனை

பேராசிரியர் அ. சி. செட்டியாரது ஆர்வவுள்ளம் தமிழ் மொழி. தமிழ்க்கலை, தமிழ்ப்பண்பாடு, தமிழினம், தமிழ்நாடு ஆகியவற்றில் படிந்து பதிந்திருந்தது என்பது உண்மையே. எனினும், இவர் இவற்றைக்கடந்து உலகளாவிய நற்சிந்தனைகளுக்கு உரியவராகத்திகழ்ந்தார்; அத்தகைய சிந்தனையூற்றத்திற்கேற்பத் தமிழ் நூல்களேயன்றி ஆங்கில நூல்களையும் தேர்ந்து பயின்று வந்தார். கற்பவை கற்றுச் சீரிய சிந்தனைகளைப் பிறரோடும் பகிர்ந்து கொள்ள முனைந்தார்.

உலக நோக்கத்தில் தம் பார்வையைச் செலுத்துகையில் அன்பு நெறியே இவர்தம் கண்முன் நின்றது. அதனைத் தொன்மைத் தமிழ்மரபுடன் விளக்க முற்பட்டுள்ளார்; இதனைச் சிறிது விளக்க முறக் காணலாம்.

உலகத்திலுள்ள எல்லா நாட்டினர்களிடையேயும் நல்லவர்கள் உள்ளனர். அவர்தம் நற்பண்புகளும் தொண்டுகளும் வாழ்வியல் நெறிகளும் உலகத்துக்கே வழிகாட்டிகளாக வேண்டும்; அதிலும் சிறப்பாகத் தமிழர்களுக்கு வழித்துணைகளாக அமைய வேண்டும் என்று எண்ணுகிறார்; அஃதாவது, 'உலக நலத்தில் தமிழ்நாட்டு நலம் அடங்கியுள்ளது' எனக் கருதுகிறார். இவ்வாற்றான் பேராசிரியர் எழுதிய 'பெரியார் மன்றோ', 'புக்கர் தி வாசிங்டன்', 'மன்னுயிர்க் கன்பர்' ஆகிய மூன்று நூல்களும் குறிப்பிடத் தக்கவையெனலாம்.

'மன்னுயிர்க்கன்பர்' எனும் நூல் செர்மானியராகிய ஆல்பர்ட் சுவைட்சரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் கட்டுரைகளின் தொகுப்பாகும்.

ஆல்பர்ட் சுவைட்சரின் வாழ்வியலை நினைக்கையில் பேராசிரியருக்குப் புறநானூற்றுத் தொடராகிய 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' (192) என்பதே முதற்கண் நினைவிற்கு வருகிறது. எனவே இத்தொடரையே மன்னுயிர்க்கு அன்பர் எனும் நூலின் அறிமுக வார்த்தையாக அமைத்துக்கொண்டுள்ளார். மேலும், கற்றவர்க்கு எந்த ஊரும் சொந்த ஊராம் எந்த நாடும் சொந்த நாடாம் எனும் திருக்குறட்கருத்தினை நூலின் உட்கிடையாக்கி, அதற்கியைபாகப் பொதுநலம் பொதுளிய பலகருத்துக்களை அடுக்கியடுக்கிக் காட்டிக் கட்டுரைவன்மையைப் புலப்படுத்தியுள்ளார்.

உயிருள்ள எல்லா மக்களிடத்திலும் உயிருள்ள பொருள்கள் அனைத்திடத்திலும் அன்பு காட்ட வேண்டுமென்பதை உயிர் மூச்சாகக் கொண்டவர் ஆல்பர்ட் சுவைட்சர் எனக்கூறி, மக்கட்குச் செய்யுந்தொண்டு கடவுளுக்குப் புரியுந்தொண்டாகும் என எண்ணி வாழ்ந்த திருமூலர், தாயுமானவர், விவேகானந்தர், தாகூர், காந்தியடிகள், வினோபாபாவே ஆகிய பேரன்புச் சான்றோர் வரிசையிலே செர்மானியராகிய அவரைக் கண்டு காட்டியுள்ளார் பேராசிரியர்.

நோபல்பரிசுபெற்ற அருளாளர் சுவைட்சரைப் பற்றி எழுதிச் செல்கையில், ''சமயநூற்கல்வி, மெய்ந்நூற்கல்வி, இசைக்கல்வி ஆகிய கலைகள் வழியாகச் சுவைட்சர் புகழ்பெற்றவராக இருந்ததால், இத்துறைகளுள் ஒன்றிலோ பலவற்றிலோ மேன்மேலும் உழைத்து அவர் உலகத்திற்பெரும் புகழை நிறுவியிருத்தல் கூடும். ஆயினும்...அவர் எண்ணம்...வேறொரு துறையில் செல்வதாயிற்று. அதற்குக் காரணம் அவர் முன்னரே பிறர்க்காக உழைக்க வேண்டுமென்று செய்த முடிவும், ஆப்பிரிக்காவில் நீக்ரோ மக்கள் உறங்கும் நோயால் (Sleeping sickness) இடர்ப்பட்டு நூற்றுக்கணக்காக இறக்கிறார்கள் என்று கேள்விப்பட்ட செய்தியுமாகும்...'' (பக். 17) என்றும், ''சுவைட்சரோ மலை அசைத்தாலும் நிலைகுலையாத வீரர். அவர் கருமத்தை எண்ணித் துணியும் இயல்பினர்; துணிந்தபின் அதனை மீண்டும் எண்ணிப்பார்த்து இழுக்குறும் இயல்பினரல்லர்'' (பக். 17) என்றும் சுட்டிக் காட்டுவது மிகவும் சிந்திக்கத்தக்கதாகும். இவ்வாறு எழுதிச் செல்கையில்,

'எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு (407).

எனும் திருவள்ளுவரின் சிந்தனை இழையோடிச் செல்வது காண்க.

உலகத்தில் பூசலும் போரும் விளைத்திடும் சீர்கேடுகளை நினைத்து மனம் நைந்து நொந்து பேராசிரியர் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். சங்க காலந்தொட்டு இக் காலம் வரையிலுள்ள பல பூசல்கள் போர் நிகழ்ச்சிகள் அவர்தம் நினைவிற்கு வருகின்றன; ஒற்றுமையுணர்வுக் காட்சிகளும் நினைவிற்கு வருகின்றன. உலக மக்கள் பல்வேற்றுமையுணர்வு காரணமாகக் காழ்ப்பைக் கடிந்தவர்களாய், ஒருமையுணர்வுடையவர்களாய்ப் பொது நலத்தின் பொருட்டும் நாட்டு வளத்தின் பொருட்டும் வாழவில்லையே என ஏக்கப் பெருமூச்சுவிடுகிறார் பேராசிரியர். 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு, (முன்பனிக்காலம்) எனுங் கட்டுரையில் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே எனும் மகாகவி பாரதியார் வாக்கினையும், 'ஒற்றுமையாக உழைத்திடுவோம், நாட்டில் உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்' எனும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் வாக்கினையும் முன்னிறுத்திச் சங்ககால நிகழ்ச்சிகளை வாசகர்களின் சிந்தனைக்குக் கொணர்கிறார் செந்தமிழ்க்காவலர்.

தாயத்தார்களாகிய சோழன் நலங்கிள்ளிக்கும் சோழன் நெடுங்கிள்ளிக்கும் போர் மூளுஞ் சூழலையும், கோப்பெருஞ்சோழனுக்கும் அவன் புதல்வர்களுக்குமிடையே நேரவிருந்த போரினையும் கண்டு, தக்கநேரத்தில் தடுத்து நிறுத்தி ஒற்றுமை விளைவித்த புலவர்தம் பெருமையினைப் போற்றிப் புகழ்ந்து செல்கிறார் பேராசிரியர். வீடு தொடங்கி நாடு வரையிலும் மக்கள் ஒற்றுமையுணர்வுடன் வாழத்தலைப்படின் உலகமே வளம் பெற்று இன்பமயமாகும் என்பதையுணர்த்துகிறார்.

முன்பொரு காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் எனும் புலவர், வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி என்னும் பாண்டியப் பெரு மன்னனையும், குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன் எனும் சோழப் பெருவேந்தனையும்

ஒரு சேரக் கண்டதும் பெருமகிழ்ச்சிகொண்டார்; ஒருமை யுணர்வு தந்த உந்துதலால் உடனே பாடத் தொடங்கினார் ஒரு பாடல். அப்பாடலின் (புறநா. 58) சாரத்தைப் பேராசிரியர் பிழிந்து மொழிந்துள்ளார்; அது வருமாறு:

''பால் நிறக்கடவுளும் நீல நிறக்கடவுளும் உடனிருப்பது போலவுள்ள நீவிர் இருவீரும் இயைந்திருப்பது இனிது. அண்ண னும் தம்பியுமாகிய பலராமனும் கண்ணனும் ஒருங்கு இருப்பது போன்று உள்ளது உமது தோற்றம். இதனினும் சிறந்த காட்சி பிறிதொன்று உண்டோ? நீவிர் இருவீரும் ஒருவருக்கொருவர் உதவிபுரிவீராக! நீவிர் இவ்வாறே ஒன்றுபட்டிருப்பின், கடல் சூழ்ந்த பேருலகு நும் கையகப்படுவது மெய்யேயாகும். இப்படி நீவிர் அன்பினால் இயைந்துள்ளதைக் காணும் சிலர் பொறாமை கொண்டு, நல்லன சொல்லுவார் போலச் சில சொல் சொல்லி நும்மைப் பிரிக்கப்பார்ப்பர். நான் வேண்டுவதெல்லாம், நீவிர் இன்று போலவே என்றும் இருக்க வேண்டும் என்பது. இருப் பீராயின், வெற்றியெல்லாம் நும் இருவர்க்கேயாம்; நும் கொடி களே பிற நாடுகள் எங்கும் துலங்கும். பிரியன்மின்! பிரியன்மின்!''

இஃது ஒரு புறமிருக்க, இக்காலப்போர்நிலை எவ்வாறு உள் ளது என்பதைச் சிந்தித்துப் பார்க்கிறார் பேராசிரியர். ஆல்பர்ட் சுவைட்சர் வரலாற்றுடன் இயைபுபடுத்தி எண்ணுகின்ற சில கருத்துக்கள் மனங்கொள்ளத் தக்கவையாகும்.

அழிவுப் போர் காரணமாக உலக நாடுகள் ஒன்றோடொன்று போர் தொடுக்கின்றனவே என்று ஆல்பர்ட் சுவைட்சர் நைந்துரு குவதையும், ஐரோப்பாவில் நடைபெறும் பெரும் போர் காரண மாக நேரிடும் தீமைகளுக்கிடையேயும் ஆப்பிரிக்காவில் நோயி னால் உழந்து கொண்டிருக்கும் மக்கள் எவ்வாற்றாலும் பாது காக்கப்படவேண்டும் என அவர் நினைந்து செயற்படுவதையும் தக்கவாறு எடுத்துக்காட்டுகிறார். போரைப்பற்றி எண்ணுகை யிலும் பாவேந்தரின் கவிதை நினைவிற்கு வருதலால்,

> 'உலகிற் பெரும்போர் உலகைப் பெறும்போர்
> உலகின் உரிமை உறிஞ்சுங் கொடும்போர்
> மூண்டது மூண்டது மூண்டது'

என அக்கவிதையையும் பேராசிரியர் சுட்டிக்காட்டுகிறார். மேலும், உலகப்போர் நின்றதும் போரின் விளைவு பற்றி ஆல்பர்ட் சுவைட்சரின் சிந்தனையைச் சீன அறிஞர் லா-தசே (Lao-Tse) சிந்தனையுடன் இயைபுபடுத்திக்காட்டும் அவர், தம் சிந்தனையைப் புலப்படுத்திக்கொள்கிறார். போற்றுதற்குரிய சீன அறிஞரின் அறவுரையினை நினைவுபடுத்துமிடத்தில், ''போரில் வெற்றிகண்டவர்கள் வெற்றிகாரணமாக மகிழ்வார்களெனில், மக்கள் கூட்டத்தினரை வதைத்தோமே என்று நினைத்து மகிழ்வாராதல் வேண்டும். போரில் வெற்றி என ஒன்று கொண்டாடப்படுகிறது என்றால், வென்றவன் சுடுகாட்டு விழா ஒன்றனில் இருப்பது போலத் தன்னை எண்ணிக் கொள்ளுதல் வேண்டும். போரிற் பல மனிதர்கள் கொல்லப் பட்டுள்ளார்கள். ஆதலால், அவர்களுக்காக ஒவ்வொருவரும் அழுதல் வேண்டும்; அவர்களிடம் இரக்கங்கொண்டு ஒவ்வொரு வரும் கண்ணீர் விடுதல் வேண்டும். இதற்கு மாறாக வெற்றி முரசு முழங்குதல் ஒவ்வாது'' (மன்னுயிர்க்கு அன்பர் பக். 59-60) என எழுதிச் செல்வது சிந்திக்கத்தகுவதாகும்.

மக்கள் எல்லோரும் மன்னுயிர்களிடத்து அன்புடையவராய்த் தம் சான்றாண்மைக்குரிய கடமைகளில் நாட்டஞ் செலுத்த வேண்டும்; நன்னெறியுடன் கூடிய பசுமையுணர்வால் தம் வாழ்வைப் பொலிவாக்கிக் கொள்ளவேண்டும்; அன்பில்லாதவரிடம் அறவுணர்வு தலையெடுக்காது என்பன போன்ற கருத்துக்களைத் திருவள்ளுவர் முதலிய நன்னெறியாளர்களின் அனுபவ மொழியால் வற்புறுத்திச் செல்கிறார். உலக நலத்திற்கு உரமூட்டும் அன்பு நெறியை விளக்குகையில்,

''அன்பென்னும் யாக்கையகத்துறுப்பு இல்லாதவர்க்குப் புறத் துறுப்பாகிய மெய்வாய் கண் மூக்குச் செவியும், பொன் வெள்ளி முதலானவையும் எப்பயனைத்தரும் எனவினவுகிறார் வள்ளுவனார். தாய் தந்தை மனைவி மக்கள் முதலான தொடர்புடையார் மாட்டு நிகழுங் காதலின்றேல் நட்பேது, நாட்டுப்பற்றேது, மொழிப் பற்றேது? மன்பதைக்குத் தரவேண்டிய அருட்பொருள்தான் ஏது? உயிர்க்கு உறுதி தான் ஏது? அன்பு என்னும் நெகிழ்ச்சி உண்டாயின், ஒருவர் வாழ்கிறார், இல்லையேல் அல்லர் என்பதே வள்ளுவனார் கருத்தென்பதை,

'புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப்பு அன்பி லவர்க்கு' (79)

என்ற அவர்தம் உரை துணையாக அறிக. அன்பென்னும் உணர்ச்சி யோடு கண்ணோட்டம் என்பதும் ஒருவர்பால் இருத்தல்வேண்டும்'' (தமிழ் காட்டும் உலகு பக். 96-97) என்றும்,

''உலகத்தில் உள்ள உயிர்ப் பொருள்கள் எல்லாவற்றின் கண்ணும் இறைப்பொருள் காணப்படுகிறது என்ற நம்பிக்கை வேண்டும் என்றும் அவர் அடிக்கடி வற்புறுத்தினார். இறைவனிடத்தில் ஒருவர் அன்புடையவராக இருக்கிறார் என்பது இறைவனாற் படைக்கப்பட்டுள்ள பல்வேறு உயிர்ப் பொருள்களிடத்திலும் ஒருவர் அன்புடையவராக இருக்கிறார் என்பதனால் விளங்க வேண்டும் என விளம்பினார். 'உயிர்களின் தொழுதகைமை' என்பதிலிருந்து உயிர்ப் பொருள்கள் எல்லாவற்றின் கண்ணும் பேரன்புடைமை தோற்றுதல் கூடும் என்றும், தோற்றுதல் வேண்டும் என்றும் அடிக்கடி அவர் கூறி வற்புறுத்துவது உண்டு'' (மன்னுயிர்க்கு அன்பர் பக். 88-89) என்றும் பேராசிரியர் எழுதிச் செல்வதால் உணரலாம்.

எல்லோரையும் உற்றவர்களாக மதித்துப் பழகுமுணர்வு ஏற் படின் மக்களுக்கு மதிப்புமிகும்; அதனால் உலக வொற்றுமையும் பரவித் தழைக்கும் என்பது பேராசிரியர் நம்பிக்கை.

''உலக மக்களெல்லாம் வெவ்வேறு தேசங்களிலிருந்து, வெவ் வேறு நாடுகளிலிருந்து, வெவ்வேறு திசைகளிலிருந்து கூடினும், அவர்கள் ஒன்று கூடும்பொழுது மக்களாகிய ஒரே இனம் என்ற உணர்ச்சி உண்டாதல் வேண்டும் என்பது பழந்தமிழ் அறிஞர் ஒரு வரின் நோக்கம்'', எனக் கூறிப் பொன்னும் மணியும் பவழமும் முத் தும் வெவ்வேறு இடங்களில் பிறக்கினும், அவற்றையெல்லாம் ஒரு சேர அமைத்து அணிகலனாக ஆக்குவதே போன்ற வுணர்வு மக்களி டையே முகிழ்த்தல் வேண்டுமென்கிறார். அஃதாவது, ''வெவ்வேறு திசைகளிலிருந்து அறிஞர் பலர் ஒன்று கூடினும் அவர்கள் தத்தம் திசையைச் சிறிது மறந்து மக்களென ஒரு கூட்டமாகக் கூடினதாக மதிக்க வேண்டுமென்பது அவரது(புலவரது) விழுமிய கருத்தாகும். இவ்வாறு கருதியவர் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு

முன்பு வாழ்ந்த கண்ணகனார் என்ற பெரும்புலவர்'' (தமிழ்காட்டும் உலகு பக். 2) என்று விளக்கிச் செல்கிறார். மேலும், கல்வி கற்றவர்கள் உலகியலில் ஒருமையுணர்வினராய்ப் பழகுதலால் பல்வேறு நாடுகளில் சிறப்பாகப் போற்றப்பெறுகின்றனர்; இதனைக் காண்கையில் 'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாஞ் சிறப்பு' என்பது பொருள் பொதிந்த மொழியாதல் கண்கூடு என இக்கால நிலையையும் இயைபுடன் எடுத்துக் காட்டுகிறார்.

பொதுவாக, உலகியலில் பொருளீட்டத்தில் நாட்டம் வைக்கின்றனர். அன்புணர்வும் அருளுணர்வும் மக்களிடையே மலர்ந்தால் அவர்கள் ஈட்டும் பொருளும் நலமுடையதாகும். ''அன்பின் நீங்கியும் அருளின் நீங்கியும் வரும் பொருளாக்கம் சிறந்த ஆக்கம் ஆகாது என்பது அவர் (திருவள்ளுவர்) உளந்தோய்ந்த கருத்து. அவற்றின் நீங்கிய பொருளாக்கத்தை அரசரும் பிறரும் விரும்புதல் ஆகாது என்று பணித்துள்ளார். இது,

'அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்' (755)

என்ற குறளால் விளங்கும்'' (தமிழ் காட்டும் உலகு பக். 42) என்று எழுதிச் செல்வது மனங்கொள்ளத்தக்கதாகும்.

உலகளாவிய சிந்தனையில், 'இட்டார் பெரியோர் இடாதார் இழி குலத்தோர்' என்பதைப் பலரும் நினைவுகூர்வர். இதனைச் சிறிது மாற்றிக் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை,

''மன்னுயிர்க் காக முயல்பவரே - இந்த
மாநிலத்து ஓங்கும் குலத்தினராம்;
தன்னுயிர் போற்றித் திரிபவரே - என்றும்
தாழ்ந்த குலத்திற் பிறந்தோர் அம்மா!''

என்று பாடியுள்ளார். இதனை எடுத்துக்காட்டித், தமக்காக அன்றி மன்னுயிர்க்காக உழைத்த சுவைட்சர் ஓங்கிய பெருங்குலத்திற்கு உரியவர் என்பது தேற்றம் எனப் பேராசிரியர் குறிப்பிடுவது சிந்தித்தற்கும் போற்றுதற்கும் உரியதாகும். இத்தகைய பெரும் புகழ்க்குரிய சுவைட்சர் உலகப்பொதுமறையாகிய திருக்குறளிடத்து பெரிதும் ஈடுபாடு கொண்டவர் என்பது ஈண்டு நினைக்கத்தகும்.

உலக நோக்கிலும் நம் நாட்டுப் பார்வையிலும் அன்பு அடிப் படையில் அறவுணர்வு தழைத்தோங்க வேண்டுமென்பதிலும், அவ்வாற்றான் மக்களின் எண்ணமும் மொழியும் செயலும் தூய்மையுடனிருத்தல் வேண்டுமென்பதிலும் நாட்டங்கொண்டு எழுதுகிறார் பேராசிரியர்; அறவுணர்வில் கொண்ட நம்பிக்கை யின் காரணமாக மக்கள் நேர்மையும் நடுநிலையும் நாணயமும் நீதியும் வாய்மையும் பொறுமையும் கல்வியும் கண்ணோட்டமும் ஒழுக்கமும் ஒப்புரவும் உடையவர்களாய் இலங்குதல் வேண்டும் என்று அவாவுகிறார். நீதியிலக்கியங்களாகிய திருக்குறள், நாலடியார், அறநெறிச்சாரம் முதலியவற்றிலிருந்து பல செய்திகளை எடுத்துக்காட்டிச் செல்கிறார். அத்துடன் நில்லாமல் புறநானூறு, பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், மணி மேகலை, பெரியபுராணம், கம்பராமாயணம் முதலிய இலக்கியங்களிலிருந்தும் அறச்சார்பான கருத்துக்களை எடுத் துரைக்கிறார்; அவற்றுள் சில காண்போம்.

பல்யானைச் செல்கெழுகுட்டுவனைக்கண்டு பாலைக்கௌத மனார் அறவுரை பகர்கையில்,

> 'சினனே காமம் கழிகண் ணோட்டம்
> அச்சம் பொய்ச்சொல் அன்புமிக உடைமை
> தெறல் கடுமையோடு பிறவும்இவ்வுலகத்து
> அறந்தரி திகிர்க்கு வழியடை யாகும்'

(பதிற்றுப்பத்து 3,2:1-4)

என வரும் பகுதியுள்ளது. ஈண்டு, மன்னனது நிலையில் சினம் முதலிய தீமைகளைப்போலக் கழிகண்ணோட்டமும் கழிபேரன்பும் ஒருவாற்றான் தொல்லைகளுக்கு வழிவகுக்குமென்பதை விளக்கி யுணர்த்துகிறார் பேராசிரியர். மேலும், அச்செய்யுளின் பிற் பகுதியில் பிறர் பிறரை நலியாமலும், வேற்றுப் பொருளை வெஃகாமலும், மனைவியைப் பிரியாமலும் வாழும்பொழுது, தம்மிடமுள்ள பொருளைப் பகுத்துண்டு வாழ்தல் வேண்டுமென் பதைப் புலவர் படிப்படியாக உணர்த்துவதையும் எடுத்து மொழிகிறார் பேராசிரியர் (தமிழ்காட்டும் உலகு பக். 152).

அறநெறிக் கருத்துக்களை மிகவாகக்கொண்ட இலக்கியங்களில் மணிமேகலை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தவநெறிப்பட்ட மணிமேகலைக்கும் சிற்றின்பம் நாடியுழலும் உதயகுமரனுக்குமிடையே உரையாடல் நிகழ்கிறது. மணிமேகலையிடம் தவநெறியை விரும்பியதற்குக் காரணம் யாதென வினவுகிறான் உதயகுமரன்; பிறப்பு, மூப்பு, பிணி, சாக்காடு இவற்றையுடைய இடும்பைக்கு இருப்பிடமாகியது உடம்பெனத்தான் அறிந்தமையை அவனிடம் கூறித் தன்னைப்போல அவனும் தவம் மேற்கொள்ள வேண்டுமெனக் குறிப்பாய்த் தெரிவிக்கின்றாள் மணிமேகலை. இவ்வாறான செய்தியை மணிமேகலையிலிருந்து,

'பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட் டிரங்கலும்
இறத்தலும் உடையது இடும்பைக் கொள்கலம்
மக்கள் யாக்கை இதுவென வுணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்;
மண்டமர் முருக்குங் களிறனை யார்க்குப்
பெண்டிர் கூறும் பேரறிவு உண்டோ?
கேட்டனை யாயின் வேட்டது செய்க'

என வரும் பகுதியை எடுத்துக்காட்டி அறன்வலியுறுத்துகிறார் பேராசிரியர் (தமிழ் காட்டும் உலகு பக். 134). அஃதாவது, நிலையாமைச் சிறப்புடைய உலகில் நிலைபெறுமாறெங்ஙனமெனில், நல்லறம்புரிதலே அதற்கு விடையென விளக்குகிறார்.

தொன்றுதொட்டு அறவாணர்கள் பலரும் மக்களின் உய்திக்கே பாடுபட்டு வந்துள்ளனர். நல்லறங்காரணமாக இம்மையிலும் மறுமையிலும் சிறந்த பேறுகள் எய்தலாம் என்று போதித்து வந்துள்ளனர். அப்போதனைகளில் மனம் பதித்த பேராசிரியர், ''உலகத்து மக்கள் போற்றிவிழையும் பல பொருள்களை வாய்மையறத்தினின்று வழுவாது ஒழுகுவதால் பெற இயலும்'' என்பதனை,

வாய்மையின் வழாஅது மன்னுயிர் ஓம்புநர்க்கு
யாவதும் உண்டா எய்தா அரும்பொருள்'

எனுஞ் சிலப்பதிகார அடிகளால் உணர்த்துகிறார். பிறகு, ''வாய்மையறம், பிறருக்கு இன்னா செய்யாமையாகிய அறம்

ஆகிய இரண்டும் அன்று இளங்கோவடிகளால் வற்புறுத்தப் பட்டவை, அண்மையில் நம் நாட்டுத் தலைவர் காந்தியடிகளால் இந்நூற்றாண்டில் வற்புறுத்தப்படுவன ஆயின'' (தமிழ் காட்டும் உலகு, பக். 3). என்று நம் நாட்டிற்கேற்பப் பாங்குடன் எடுத்துக் காட்டுகிறார். பாரத நாட்டின் குறிக்கோள் மொழியாக 'வாய் மையே வெல்லும்' (சத்தியமேவ சயதே) என அமைந்துள்ளமை ண்டு இயைபுடன் சிந்திக்கத்தகும்.

பொதுவுடைமை பற்றிய சிந்தனை

உலகளாவிய நோக்கில் பொதுவுடைமைக் கொள்கைக்குப் பல நாடுகளில் வரவேற்பு இருந்து வருதலைக் காண்கிறார் பேராசிரியர்; நடைமுறை வாழ்க்கையிலும் இலக்கியங்களிலும் காணலாகும் பொதுவுடைமைக் கருத்துக்களைச் சீர்தூக்கிச் சிந்திக்கிறார். தமிழ்ப்புலவராக இருந்துகொண்டே பாட்டாளி மக்களுக்கு உழைத்த தமிழ்த்தென்றல் திரு. வி. கல்யாண சுந்தரனாரளவிற்குத் தீவிரமாகச் செயலில் இறங்காவிடினும் செந்தமிழ்க் காவலர் தம் எழுத்துக்களில் பொதுவுடைமைக் கருத்துக்களை இயன்றமட்டில் கையாண்டுள்ளார்; பொதுவுடை மைத் தொடர்பாகப் பிறர் கூறியுள்ள செய்திகளையும் மக்கள் நினைவுகூருமாறு செய்துள்ளார்.

உலகினில் கடுமையாக உழைக்கின்ற உழவர்களும் பாட்டாளி களும் தம் வாழ்க்கையில் வளங்காணாது வறியவர்களாய் வாடி நிற்பதை நினைந்து தமிழ்க்கவிஞர்கள் பலர் குமுறிப்பாடி யுள்ளனர்; அவர்களுள் பாவேந்தர் பாரதிதாசன் குறிப்பிடத் தக்கவர். பகலிலெல்லாம் உடல் கடுக்கும்படி உழைத்த உழவனைப்பற்றி அவர் பாடுகையில்,

> அழகிய நகரை அவன் அறிந்த தில்லை
> அறுசுவை உணவுக்கு அவன்வாழ்ந்த தில்லை
> அழகிய நகருக்கு அறுசுவை உணவை
> வழங்குதல் அவனது வழக்கம்; அதனை
> விழுங்குதல் மற்றவர் மேன்மை ஒழுக்கம்'

எனவும், உழைக்கும் பாட்டாளிகளின் குமுறலுக்குப் பரிந்து கொண்டு வாதிடுவதை,

"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெல்லாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெல்லாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?

எனவும் பாடிச் செல்லுதலைத் தம் கருத்திற்கிசையச் சுட்டிச் செல்கிறார் பேராசிரியர்.

உலகத்திலுள்ள தொழில்களுக்கெல்லாம் உயிர்நாடியாகச் சிறப்புடையது உழவுத் தொழிலாகும். 'தமிழ் காட்டும் உலகு' எனும் நூலில் 'உலகத்தார்க்கு ஆணி' என்ற கட்டுரையில் உழவுத் தொழிலின் இயல்பையும் மாட்சியையும் விளக்கி எழுதுகிறார் பேராசிரியர்.

''தொழுதுண்ணுஞ் சுவை நிரம்பிய பொருளைவிட உழுதுண்ணுஞ் சுவையில்லாத பொருளும் இனியது என்பது தமிழர் கொள்கை'' எனக் கூறும் அவர் உழவர்களின் நிலையைச் சிந்தித்துப்பார்க்கிறார்.

''உழுதொழிலைச் செய்து, தாம் உண்ணாமல் பிறர்க்கே அளிக்க வேண்டும் என்பது திருவள்ளுவர் கருத்தன்று. இஃது அவர் உழுது வாழ்வாரே வாழ்வார் என்று கூறாததாலே விளங்கும். அவர் கருத்துப்படி, உழவேண்டும், உழுது உண்ண வேண்டும், உண்பதோடன்றிப் பிறர் போல உடுக்கவும் வேண்டும், உறைவிடம் பெறுதலும் வேண்டும், தாம் உண்டலேயன்றிப் பிறர்க்கும் கொடுத்தல் வேண்டும். இக்கருத்துக்கள் அனைத்தும் அவர் கூறிய 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்னும் பகுதியில் அடங்கியுள்ளன. உழவுத் தொழில் கடினமாயினும் மேற்கொள்ளத்தக்கது. அத்தொழிலின் கடுமை 'உழவு' என்ற சொல்லாலே விளங்குகிறது. உழத்தல் என்றால் வருந்தி வேலை செய்தல் என்பது பொருள்'' எனப் பேராசிரியர் எழுதுவதுகொண்டு உழைப்பாளிகளிடம் அவர் கொண்ட பரிவுள்ளத்தை யுணரலாம்.

சமுதாயச் சிந்தனை

உலகியற் சமுதாயத்திலே மக்களுக்கு மனநிறைவு இருக்கிறதா? மனநிறைவு இல்லையெனின் அதற்குரிய காரணங்கள் என்ன என்பதை அலசி ஆராய்கின்றார் பேராசிரியர். சமுதாய நிலையினைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப மக்கள் வாழத் தலைப்பட வேண்டுமென்பதற்காகத் தம் கட்டுரைகளில் ஆங்காங்கும் ஆக்கக் குறிப்புக்கள் பலவற்றை வழங்கியுள்ளார்.

'செல்வமும் வறுமையும்' (தமிழ் காட்டும் உலகு) எனுங் கட்டுரையில் புலவர்கள்தீட்டும் சமுதாயச் சொற்சித்திரங்களை நம் முன் கொணர்கிறார்; சமுதாயத்தைச் சித்திரித்துக் காட்ட நினைக்கும் புலவர்கள் செல்வச் செழிப்பையும் வருணிக்கின்றனர், வறுமைச் சூழலையும் வருணிக்கின்றனர் என்று கூறுகிறார். நெடுநல்வாடையில்பாண்டியன் நெடுஞ்செழியனின் வளமான அரண்மனையையும், அவ்வரண்மனை அலங்காரத்தையும், அரச வாழ்வினர் படுத்துறங்குதற்கென அமைந்த கலைநிறை கட்டிலையும் அழகுற வருணித்துக் காட்டுகிறார் நக்கீரர் என்பதால் நாடே வளத்தை மட்டும் கொண்டிலங்குவதாகக் கருதவியலாது. செல்வம் ஒரு புறமிருப்பினும் வறுமையும் மற்றொரு புறத்தில் இருக்கத்தான் செய்யும் என்னும் உண்மையைத் தெளிதல் வேண்டும். அதற்கேற்பக் கொடிய வறுமைச் சித்திரங்களையும் சிறுபாணாற்றுப் படையிலிருந்தும் (பெருஞ்சித்திரனாரின்) புறநானூற்றுப் பாடல்களிலிருந்தும் எடுத்துக்காட்டுகிறார் பேராசிரியர்.

பண்டைக் காலத்திலிருந்த பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் முற்றிலும் மாறிவிடவில்லை. இக்காலத்திலும் செல்வ மக்களின் களிப்பினை ஒரு புறத்திலும், வறிய மக்களின் மனப்புழுக்கத்தை மற்றொரு புறத்திலும் காணலாம். நம் காலத்தில் வாழ்ந்த கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும் தம் கவிதைகளில் அழகுற எடுத்துக் காட்டியுள்ளார். இதனைப் பேராசிரியர் குறிப்பிட்டு விளக்குகையில் ''செல்வச் சிறுமியர்கள் நல்ல பாகமாகச் செய்த பண்டம் உண்டலையும், பக்குவமான பழங்கள் உண்டலையும், நேரத்திற்கு நேரம் உடையை மாற்றி அணிதலையும், சீவிச் சிணுக்கெடுத்து மலர் சூட்டி அழகு செய்து கொள்ளுதலையும் கூறினார். 'பத்துப்

பசுக்களெம் வீட்டிலுண்டு - நல்ல பாலுக்கு யாதொரு பஞ்சமில்லை' என்று பெருமிதத்தோடு அந்தச் சிறுமியர்கள் களித்ததாக அவர் (கவிமணி) கூறினார். அதற்கெதிரே ஏழைவீட்டுச் சிறுமியர்கள் 'அன்னப்பால் காணாத ஏழைகட்கு—நல்ல ஆவின் பால் எங்கே கிடைக்குமம்மா' என்று கதறினார்கள் என்றார். இட்டலி என்றால் அது எந்த எலி என்று கேட்கக் கூடிய நிலையில் உள்ள ஆயிரக் கணக்கான வறியவர்களுக்காக இரங்கினார். நேரத்திற்கு நேரம் 'காப்பி' 'காப்பி' என்று கத்துகின்ற பெருமக்களை நோக்கி ஏழை மக்கள், 'காப்பி என்பது சட்டையா? தொப்பியா? உணவுதானா? என்று கேட்டது போல எழுதி வைத்தார் (கவிமணி)' என்று சித்திரித்துக் காட்டியுள்ளார்.

இத்தகைய சமுதாயத்தில் மதம் இனம் சாதிக் கொடுமைகள் தலை விரித்தாடுதலையும், அதனால் முன்னேற்றம் தடைபடு வதையும் கண்டு மனம் புழுங்குகிறார் பேராசிரியர்;சில இடங்களில் கடுமையாகக் கண்டிக்கவும் முனைகிறார். சிறந்த கவிஞராகவும் சமரச ஞானியாகவும் விளங்கிய மகாகவி பாரதியாரின் கருத் துக்கள் வாயிலாகத் தம் கடவுட் கொள்கையைத் துணிவுடன் எடுத் துரைக்கிறார்.

''சமயம் காரணமாக மதம் பிடித்தலை வெறுத்தவர் பாரதியார். மக்கள் எல்லாம் ஒரு குலத்தவர், ஓரினத்தவர் என்ற கொள்கையில் அழுத்தமான நம்பிக்கையுடைய அவர் கடவுள் ஒருவரே உண்டென் றும், நாமெல்லாம் அவருடைய மக்கள் என்றும் மதித்தார் என்பதில் வியப்பில்லை. 'சாதிகள் இல்லையடி பாப்பா குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்ல, பாவம்' என்றும், 'சாதிக் கொடுமைகள் வேண்டாம்— அன்புதன்னில் தழைத்திடும் வையம்' என்றும் அடிக்கடி கூறிவந்த பாரதியார், பொய்ம்மைச் சாதி வகுப்புகள் எல்லாம் தகர்க்கப்பட வேண்டும் என விழைந்தார்'' (தமிழ் காட்டும் உலகு பக். 17) என்று கூறிச் செல்கிறார் பேராசிரியர். அதற்கிணங்கப் பாரதியார் பாடிய,

> 'நிகரென்று கொட்டு முரசே இந்த
> நினிலம் வாழ்பவர் எல்லாம்,
> தகரென்று கொட்டு முரசே - பொய்ம்மைச்
> சாதி வகுப்பினை யெல்லாம்'

எனவரும் பாடலை எடுத்துக் காட்டியுள்ளார்.

பல சமயத்தினரும், பல வருணத்தவர் எனச் சொல்லப்படுபவரும் வணங்கும் கடவுள் முடிவில் ஒன்றே என்பதற்கு,

'பாருக்குள்ளே தெய்வம் ஒன்று இதிற்
பற்பல சண்டைகள் வேண்டாம்'
'தெய்வம் பலபல சொல்லிப் பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்'

எனும் பாரதியார் வாக்குகளைச் சுட்டிச் செல்கிறார். பாரதியாரின் புதிய ஆத்திசூடிக்கு அமைந்த பரம்பொருள் வாழ்த்தினில், பிறை சூடிய சிவன், பாற்கடற் பரமன், நபிநாயகத்தின் அல்லா, ஏசு நாதரின் தந்தை எல்லாரும் ஒருவரே என்ற தெளிவினைக் காணலாம் என்கிறார். 'அறிவே தெய்வம்' எனப் பல இடங்களிலும் பாரதியார் முழக்கமிடுவதைக் கூறிப் பற்பல சிறு தெய்வங்களை வணங்கும் மக்களுக்காகத் தம் இரக்கத்தைப் புலப்படுத்திக் காட்டுகிறார். அதற்கேற்ப பாரதியார்,

'மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கும் மதியிலிகாள் - எதனூடும்
நின்றோங்கும் அறிவொன்றே தெய்வமென்று
ஓதியறியீரோ'

எனப் பாடும் பாடலை எடுத்து மொழிகிறார் பேராசிரியர். கடவுட் கொள்கை காரணமாக உலகில் பல்வேறு மதங்களும் கோட்பாடுகளும் தோன்றியுள்ளதை நினைவு கூர்கிறார். உலகத்தில் ஐந்தே கண்டங்கள் இருந்தும் மதங்களோ கோடியாக இருக்கின்றனவே எனக் கருதித்துயருற்றவர் பாரதியார் என்பதைக் கூறிக், 'காயில் புளிப்பதும் கண்ணன், கனியில் இனிப்பதும் கண்ணன்', 'சிவனாம் கண்ணனே! நினைத்தொழுவேன்', 'தவறா துணர்வீர் புவியீர்— மாலும், சிவனும், வானோர் எவரும் ஒன்றே' என்றெல்லாம் வரும் பாரதியார் வாக்குகளை ஒருமையுணர்ச்சிக்குச் சான்றாகக் காட்டுகிறார்.

'கடவுள் ஒருவரே என்ற இத்தகைய கருத்து இக்காலத்திற்குக் கட்டாயம் வேண்டும். இக்கருத்தின் அடிப்படையில்தான் மக்கள் எல்லாரும் பிறப்பினால் ஒத்தவர் என்ற எண்ணம் வலியுறும். இவ்வெண்ணம் துணையாகத் தான் சமுதாய வளர்ச்சி ஏற்படும்.

சமுதாய வளர்ச்சியே நாட்டு முன்னேற்றத்தின் உயிர்' எனப் பேராசிரியர் கூறுவதை இக்கால இளைஞர் சமுதாயம் செவி கொடுத்துக் கேட்டால் நல்லது.

பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், கல்லாமை, சமயப் பிணக்கு கள், சாதிப் பூசல்கள் ஆகியவற்றுடன் ஆணுக்குப் பெண் அடிமை யென்ற உணர்வும் கைம்பெண் நலிவும் சேர்ந்து கொண்டன. இவற்றால் தமிழ்ச் சமுதாயத்தில் முன்னேற்றம் தடைப்பட்டது. இதனை எங்ஙனம் எதிர்கொள்வது என்று பலரும் சிந்தித்துள்ளனர். சமுதாய நிலைகளைச் சித்திரித்துக் காட்டினால் என்றாவது விடிவு ஏற்படும் எனக் கவிஞர்களும் எழுத்தாளர்களும் கருதியுள்ளனர்.

பாரதிதாசன் கவிதைகளைப் பயின்ற பேராசிரியர். மகளிர் நிலை பற்றிக் குறிப்பிடுகையில், ''ஆடை, அணிகலன், ஆசைக்கு வாசமலர் தேடுவதும், ஆடவர்க்குச் சேவித்திருப்பதும், அஞ்சுவதும், நாணுவதும், ஆமையைப்போற் கெஞ்சுவதும் ஆகக் கிடக்கும் மகளிர் குலம் மானிடர் கூட்டத்தில் வலிவற்ற ஒரு பகுதி'' எனப் பாரதிதாசன் இரங்குவதாகக் குறிப்பிடுகிறார்; மேலும், மாதர்தம் உரிமை மறப்பது மாண்பா? மாதர் முன்னேற்றத்தால் மகிழ்வது மாண்பா ஆய்ந்து பார்?'' என அவர் வினவுவதாகக் கூறுகிறார் பேராசிரியர் (செங்கோல் வேந்தர் பக். 70).

பாரதிதாசன் பாடியுள்ள 'இருண்ட வீடு', 'குடும்ப விளக்கு' எனும் நூல்களைப் பயின்றால் இன்றைய சமுதாயநிலையை நன்கு புரிந்து கொள்ளலாம் என்பது பேராசிரியர் கருத்து.

பல்வேறு உத்திகளில் மகளிருக்காகப் பரிந்துகொண்டு கவிதை பாடும் பாரதிதாசன், மறுமணம்—கைம்பெண் திருமணம்-பற்றியும் நயமாக வலியுறுத்துவதை எடுத்துக் காட்டுகிறார் பேராசிரியர்.

''வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தாற்பின் மணத்தல் தீதோ?
பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?''

என்று வரும் பாரதிதாசன் கவிதைகளைக் குறிப்பிட்டுவிட்டு, ''இவ் வடிகளை அறியா இளைஞர் இல்லை'' எனக் கூறிச் செல்கிறார். இதனால், படிக்கின்ற அளவில் கடமை நிறைவேறிவிட்டது என்றே

இளைஞர் சமுதாயம் எண்ணுகிறது என்பதும்,சமுதாயச் சீர்திருத்த நோக்கில் கைம்பெண்களை மணம் புரிந்துகொள்ள இளைஞர்கள் முன் வருவதில்லை என்பதும் அறியலாகும்.

சமுதாயக் கேடுகளைக் களைந்து நாடு முன்னேற வேண்டு மெனின் ஆடவரும் பெண்டிரும் முறையாகக் கல்வி கற்க வேண்டும்; உலக நன்மைக்காக நல்லறிவுடைய குடிமக்களை உருவாக்க வேண்டுமெனில் தாய்மார்கள் கல்வி கற்றவர்களாக இருந்தால் தான் இயலும். இவ்வாறான கருத்துக்களை யெல்லாம் பாரதிதாசன் கவிதைகளைக் கொண்டே விளக்கிச் செல்கிறார் பேராசிரியர்; இதனை,

'கல்வியில் லாத பெண்கள்
களர்நிலம் அந்நி லத்தில்
புல்விளைந் திடலாம்; நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை
கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி, அங்கே
நல்லறி வுடைய மக்கள்
விளைவது நவில வோநான்?'

எனவருங் கவிதைச் சான்றால் உணரலாம்.

பொதுவாக, தமிழ்ச் சமுதாய முன்னேற்றம் இன்றைய இளைஞர்கள்கையில் உள்ளது என்று அடிக்கடி கூறுவார் செந்தமிழ்க் காவலர். தம்மிடம் பயின்று விடைபெறும் மாணவர்களுக்கு விருந் தளித்து, ''அடக்கமாக வாழுங்கள். ஆனால், பிறர் அடக்க இடம் கொடுத்து விடாதீர்கள்'' என நயமாக மனத்தில் பதியும் வண்ணம் மொழிவார். இந்தப் பொருள் பொதிந்த மொழியையே இச் சமுதா யத்திற்கு இவர் வழங்கிய தேர்ந்த அறிவுரையாகக் கொள்ளலாம்.

தமிழ்ப்பற்றுச் சிந்தனை

செந்தமிழ்க் காவலரின் தமிழ்ப்பற்று மிகவும் போற்றிப் புகழ் தற்குரியது. வாழ்க்கையின் உயிர்மூச்சாகவே அஃது இருந்து வந்த தெனின் மிகையன்று. ஒவ்வொரு மொழியினருக்கும் தத்தம் தாய்மொழியில் பற்றும் ஈடுபாடும் இருப்பதென்பது இயல்பே;

அவ்வாற்றான் தமிழர்களும் தம் தாய்மொழிப்பற்றுடையவர்களாய் அதன் வளர்ச்சிக்காகப் பாடுபடவேண்டும் என்று அவாவுகிறார் பேராசிரியர்.

தெய்வநலஞ்சான்ற முரசு கட்டிலில், வழிவருத்தங்காரணமாகத் துயின்ற புலவர் மோசிகீரனாரைக்கண்டு வெகுளாது, அவரது தமிழ்ப் புலமைக்கு மதிப்பளிக்கும் வகையில் சேரமன்னன் கவரி வீசியதை நினைவுகூர்கிறார் பேராசிரியர். தமிழ்மொழியால் பிறரை ஆக்கவும் அழிக்கவும் செய்யலாம் என்பதற்கு, நக்கீரர்-குசக்கோடன் கதையை எடுத்துக் காட்டுகிறார். அஃதாவது, தமிழின் பெருமையறியாமல் 'ஆரியம் நன்று தமிழ் தீது' எனக் குசக்கோடன் உரைக்கவே, கேட்டுக்கொண்டிருந்த நக்கீரர், 'அவன் ஆனந்தம் சேர்க' எனக்கூறி இறக்குமாறு செய்துவிட்டார்; பிறகு, இரக்கங்கொண்ட நிலையில், செந்தமிழே தீர்க்க' எனமொழிந்து அவனை மீண்டும் உயிர்ப்பித்தார் எனுங் கதையைக் கூறி,

'ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச் - சீரிய
அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையாற்
செந்தமிழே தீர்க்க சுவாகா'

எனும் பழம்பாடலையும் சான்றாகக் காட்டுகிறார் பேராசிரியர்.

சிலப்பதிகாரத்திலிருந்து தமிழ்ப்பற்றுக்குச் சான்றாகச் செங்குட்டுவனது வடநாட்டுப் படைபெடுப்பை விரித்துரைக்கிறார். ''வட நாட்டில் பாலகுமரன் என்ற அரசன் ஒருவனுடைய மக்களிருவர், கனக விசயன் என்பார், தமிழையும் தமிழரசரையும் பழித்தார் எனக் கேள்வியுற்றுச் சேரன் செங்குட்டுவன் அவ்வட நாட்டார்மீது படையெடுத்துச் சென்று, அவர் தலைமீது கண்ணகிக்கு (உருவச் சிலையமைக்க) உரிய கல்லினைக் கொணர்ந்தான்'' எனவும் கூறி, மொழி காரணமாகச் செங்குட்டுவன் நிகழ்த்திய போராற்றலை விளக்குகிறார் பேராசிரியர். மணிமேகலையிலிருந்தும் திருமுறைகளிலிருந்தும் தமிழ்மொழிச் சிறப்புக்கூறுகளை இனிது காட்டிவிட்டுப் பரஞ்சோதி முனிவரின் தமிழ்ப்பற்றைக் கூறுகிறார் பேராசிரியர்.

பரஞ்சோதி முனிவர் மிகுந்த தமிழுணர்ச்சியுடையவராய், ''இலக்கணவரம்பில்லாத ஏனைய மொழிகள்போல் இழிவாக எண்ணக் கூடிய நிலையில் தமிழ்மொழியில்லை'' என்பதை,

'பண்ணு றத்தெரிந் தாய்ந்தஇப் பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ''

எனும் அடிகளால் விளக்குகிறார்; மேலும், அவரே தமிழின் பெருமையைக் கூற முடியுமா என நினைத்து அஞ்சியவர், பிறகு கூற முடியும் என்ற நம்பிக்கையில்,

'யார் அறிவார் தமிழருமை என்கின்றேன்என்
அறிவினம் அன்றோ?உன் மதுரைமூதூர்
நீர் அறியும் நெருப்பறியும், அறிவுண்டாக்கி
நீ அறிவித்தால் அறியும் நிலமுந்நானே'

என எழுதிச் செல்கிறார் என்பதை வரைந்து காட்டுகிறார் பேராசிரியர்.

இருபதாம் நூற்றாண்டில் மிக எழுச்சியுடன் பாடிய கவிஞர்கள் சிலரின் மொழிப்பற்றையும் சில பாடற்பகுதிகளால் விளக்கிச் செல்கிறார்;

'யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்றும், 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே—அதைத் தொழுது படித்திடடி பாப்பா' என்றும் பாரதியார் பாடியதையும், தமிழன் என்றொரு இனம் உண்டு... அமிழ்தம் அவனுடை மொழியாகும்' என்று நாமக்கல் கவிஞர் பாடியதையும், தனிமைச் சுவையுள்ள சொல்லை-எங்கள் தமிழி னும் வேறெங்கும் யாங்கண்டதில்லை' என்றும், 'தமிழ் என்னில் எம்முயிர்ப் பொருளாம்' என்றும், தமிழ் என்று தோள் தட்டி ஆடு! நல்ல தமிழ்வெல்க வெல்க என்றே தினம்பாடு' என்றும் பாரதிதாசன் முழங்கியதையும் தேர்ந்தெடுத்துக்காட்டு கிறார். (மேற்கூறிய செய்திகளை 'முன்பனிக்காலம்' எனும் நூலில் வரும்' மொழிப்பற்று' என்பதில் காண்க).

மொழிப்பற்றுடையவர்களாய் விளங்கிய அருட்சான்றோர் களுள் சிலரைக் குறிப்பிட்டுப் பேசுகிறார் பேராசிரியர்.

இராமலிங்க அடிகளும் எல்லாச் சாதியினரிடத்திலும், எல்லாச் சமயத்தினரிடத்திலும், எல்லா மதத்தினரிடத்திலும் பொதுமை நோக்குடையவராக இருந்தாரேயாயினும், தமிழ் மொழி வழியாகத்தான் சாகாக்கல்வி சிறப்பாக அறியப்படும் என்றும், ஏனைய மொழிகளைக் காட்டிலும் தமிழ் மொழிக்குச் சிறப்பு உண்டு என்றும் கருதினார் என்பது அவருடைய சத்தியப் பெருவிண்ணப்பத்தினால் தெளிவாகிறது' (செங்கோல் வேந்தர் பக். 43-44) என எழுதிச் செல்லும் பேராசிரியர், இராமலிங்க அடிகள் எழுதியுள்ள உரை நடைப் பகுதிகள் சிலவற்றை எடுத்துக் காட்டுகிறார். இவ்வாற்றான், ''.. ...பயிலுதற்கும் அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய், பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய், சாகாக்கல்வியை இலேசில் அறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழியொன்றனிடத்தே மனம்பற்றச் செய்து அத்தென்மொழிகளாற் பல்வகைத்தோத்திரப் பாட்டுகளைப் பாடுவித்தருளினீர்'' என்றும், 'கடவுள் அருளா ணையால் கற்பிக்கப்பட்டதும்.. இனிமையென்று நிருத்தம் சிந்திக் கப்பெற்றுள்ளதுமான தமிழ் என்னும் இயற்கையுண்மைச் சிறப் பியல் மொழி (செங்கோல் வேந்தர் பக். 44)' என்றும் வருமிடங் களைக் காணுமாறு செய்கிறார்.

நிலைகுலையா மலையாகிய மறைமலை அடிகளின் மொழிப்பற்றைப் புலப்படுத்திப் பேராசிரியர் எழுதுகையில், தமிழர்கள் தத்தம் வீட்டில் நடைபெறும் வினைகள் எல்லாவற் றிலும் தமிழ் மொழியையே கைக்கொள்ள வேண்டுமென்றும், தமிழ்க் கலையையும் தமிழ்ப் பண்பாட்டினையும் பாதுகாக்க வேண்டுமென்றும் தமிழ்நாட்டுக்கோயில்களில் தமிழ்மொழி வாயி லாக வழிபாடு இயற்றப்படவேண்டுமென்றும் அடிக்கடி வற்புறுத் தினார் அப்பெரியவர். அவர் இயற்றிய 'தமிழர் மதம்' போன்ற நூல்களினால் அவரது கருத்து தெளிவாகப் புலப்படும்'' (செங் கோல் வேந்தர் பக். 52-53) என்று குறிப்பிடுகிறார். பிறமொழிக் கலப்பினால் தமிழின் தூய்மையும் தனித்தன்மையும் கெடுவதை யுணரும் பேராசிரியர், மறைமலை அடிகளின் கருத்தைத் தமக்கு அரணாகக் கொள்கிறார்; அது வருமாறு :

''தமிழ் முன்னோர் தமது தமிழ் மொழியைப் பிறமொழிக் கலப்பின்றித் தூயதாய் எல்லா வளனும் நிரம்ப வளர்த்து வழங்கி வந்தவாறு போல, இஞ்ஞான்றைத் தமிழருந் தமிழ் மொழியைத் தூயதாய் வளனுற வளர்த்து வருதல் வேண்டும். ஒவ்வொரு மக்கட் குழுவினருந் தமது மொழியைத் தம்முயிரினுஞ் சிறந்ததாக வைத்துப் பேணிவருகையில், இஞ்ஞான்றைத் தமிழர் மட்டுந் தமிழ்மொழி யுணர்ச்சி சிறிதுமில்லாக்கயவர் களாய் இருக்கின்றனர். அவருள் அத்தி பூத்தாற் போற் றமிழ் கற்பார் சிலருந் தமது மொழிப் பெருமையை யுணராமல், இறந்துபோன வடமொழிச்சொற்கள் சொற்றொடர்கள் கதைகளை யும், நேற்றுண்டான நாகரிகமில்லா மொழிகளின் சொற்கள் சொற் பொருள் வழக்குகளையும் ஒரு வரைதுரையின்றியெடுத்துத் தமிழிற் புகுத்தி அதனைப் பாழ்படுத்தி அவ்வாற்றால் தம்மை அப்பிற மொழியாளர்க்கு அடிமைப்படுத்திக் கொள்ளுதலுடன் அவ்வடிமை வாழ்க்கையையே தமக்கொருபெருமை வாழ்க்கையாகவும் பிழைபட நினைந்து இறுமாந்து ஒழுகுகின்றனர். தன்னைப் பெற்ற தாயைக் கொல்லுந் தறுகணன் போலத் தன்னை அறிவுபெற வளர்த்துப் பெருமைபடுத்திய தமிழைச் சீர்குலைக்கும் போலித் தமிழ்ப் புலவரைப் பின்பற்றி நடவாமல் தமிழை யுள்ளன்புடன் ஓம்பித் தூயதாய் வழங்கும் உண்மைத் தமிழாசிரியர்களைப் பின்பற்றி நடத்தலிற்றமிழ் நன்மாணவர் அனைவருங் கருத்தாயிருத்தல் வேண்டும்''.

பொதுவாகச், செந்தமிழ்க் காவலர் தம் தாய்மொழியாகிய தமிழின் சிறப்புக் கூறுகளைப் பல கட்டுரைகளில் வடித்துத் தந்துள்ளார். 'தமிழோசை' எனுந் திருப்பெயரிலேயே ஒரு நூலியற்றி அதனில் மொழியியல்புகளையும் அவை தொடர்பான பல நுண் கூறுகளையும் அடுக்கிக் கூறியுள்ளார்; தமிழிளைஞர்கள் தோய்ந்து பயின்று இன்புறுவார்களாக.

கலையார்வச் சிந்தனை

உலகத்தில் எம்மொழிக்கும் அமையாத மூவகைப் பாகுபாடு-இயல், இசை, கூத்து(நாடகம்)எனும் வகைகள்-தமிழுக்கு உண்டு. இதனால் முத்தமிழ் என்றும் தமிழ் அழைக்கப்படுகிறது. கலை நோக்கில், இசையும் கூத்துமாகிய கலைக் கூறுகள் தமிழுடன்

தொன்றுதொட்டே இயல்பாகப் பின்னிப் பிணைந்துள்ளன. இயற் றமிழிலே யன்றி இசைத் தமிழிலும் நாடகத் தமிழிலும் நாட்டங் கொண்டிருந்த செந்தமிழ்க் காவலர், தம் கட்டுரைகளில் முத்தமிழ்க் கூறுகளுக்கும் இடந்தந்துள்ளார்.

இயற்றமிழைச் சார்ந்த புறநானூறு போன்ற இயற்றமிழ் நூல் களிலும் கலைக் கூறுகளைத் தேர்ந்து காண முயன்றுள்ளார். 'புறநானூறும் கலைகளும்' (முன்பனிக் காலம்) எனுங் கட்டுரையில் இசை, நாட்டியம், ஓவியம், படைக்கலப் பயிற்சி, போர்க்கலை, மற்போர், கோள்நூல், அறநூல், சொல்வன்மை ஆகியவற்றின் திறங்களைத் திறனாய் வடிப்படையில் கூறுகின்றார்.

மக்கள் வாழ்க்கையில் பல்வேறு கலைக் கூறுகள் அறிந்தோ அறியாமலோ பின்னிப் பிணைந்துள்ளன என்பர். கலைகளின் வளர்ச்சியானது கலைப் படைப்பாளர்களால் மட்டும் அமைவதன்று கலைப் புரவலர்களாலும் அமையக் கூடியது என்பதற்குச் செந் தமிழ்க் காவலர் பல சான்றுகளைக் கூறிச் செல்கிறார்.

''அக்காலத்தில் இசைக் கலையில் வல்லுநரை ஆதரித்தோர் பலர். அரசர் முதலானோர் பாணர்க்குப் பொன்னாலாகிய தாமரைப் பூ வெள்ளி நாரால் தொடுத்ததனையும், பாடினிக்குப் பொற்கலன் களையும் கொடுத்துச் சிறப்புச் செய்தனர்'' என்றும், ''தமிழ்ப் பெருவேந்தர் மூவரும், சிற்றரசரும், செல்வர் பிறரும் பாடவல்ல ஆடவரையும் பெண்டிரையும் பாதுகாத்து வந்தனர். அவருக்கெனப் பரிசிலாக நாடுகளையும் ஊர்களையும் கொடுத்த வள்ளல்களிற் பாரி சிறந்தவன்'' என்றும், ''கோப்பெருஞ்சோழன் பாடுநர்க்கும் ஆடுநர்க்கும் பேரன்போடு கொடுத்தான் என்ற இசை திசையெங்கும் பரவியிருந்தது'' என்றும் பல செய்திகளைத் தொகுத்துக் காட்டுகிறார்.

சங்க காலந்தொட்டே பாடலிலும் ஆடலிலும் ஈடுபாடு கொண்டவர்கள் தமிழர்கள். நாட்டியக் கலையில் தேர்ந்தவர் களாகக் கூத்தர்கள் விளங்கினர். தாம் பெற்ற பெருவளம் தம்மைப் போன்ற பிறரும் பெறவேண்டுமென்ற நாட்டமுடையவர்கள்; இவர்கள் காரணமாகவும் ஆற்றுப்படையிலக்கியம் தோன்றியது என்பதற்குச் சான்றாக மலைபடுகடாம் அல்லது கூத்தராற்றுப் படை அமைந்துள்ளது.

ஆடற்கலையில் வல்லவர்களான கூத்தர்களைப் பற்றிய குறிப்புக்கள் தமிழிலக்கியங்கள் பலவற்றில் காணலாம். கூத்தர் களின் கோலத்திலும் மெய்ப் பொருளியற் கருத்தினைப் புலப்படுத்த எண்ணுகிறார் உறையூர் முது கண்ணன் சாத்தனார்; அவர்,

..., ... ''விழவிற்
கோடியர் நீர்மை போல முறைமுறை
ஆடுநர் கழியும்இவ் வுலகத்து... '' (புறநா. 29)

எனவருஞ் செய்யுட் பகுதி வாயிலாகக் 'கூத்தாடுவோர்' தாம் கொள்ளுங் கோலத்தைக் களைந்து மாறி மாறி வருவது போல, இவ்வுலகில் உள்ளோரும் செத்துப் பிறந்து மாறிமாறி வருவதுண்டு எனும் உயரிய தத்துவத்தை உணர்த்தியுள்ளார் என்று விளக்கந் தருகிறார் பேராசிரியர்.

கலைகளுக்கெல்லாம் தாய்த் தன்மை கொண்டது ஓவியக்கலை, தமிழர்களின் ஓவியக் கலை பற்றிச் சிந்தித்த நிலையில், மாற்பித்தியார் வரைந்த'ஓவத்தன்ன இடனுடை வரைப்பு'எனும் பகுதியை ஆராய்கிறார். ''ஓவியம் வீட்டைப் போலவே இருக் கிறது என்று சொல்லக் கூடிய காலங் கழிந்து, வீடு ஓவியத்தைப் போல இருக்கிறது என்று சொல்லக் கூடிய காலம் ஏற்படுதற்கு நீண்ட இடையீடு வேண்டும். சித்திரத்திற் பழகிப் பழகி, அதனைச் சுவைக்கும் பக்குவம் அடைந்த பிற்பாடுதான் சித்திரத்தைப் போல வீடு இருக்கிறது என்று சொல்ல இயலும். இதனால் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழர் ஓவியக் கலையில் மிக்க தேர்ச்சி பெற்றவர் என்பது பெறப்படும்'' எனக் கூறிக் காட்டுகிறார் செந்தமிழ்க் காவலர். கலைகள் பற்றிய இத்தகைய ஆராய்ச்சிச் சிந்தனைகளை இவர் எழுதியுள்ள கட்டுரைகளில் ஆங்காங்குக் கண்டு மகிழலாம்.

'முன்பனிக்காலம்' எனும் நூலில் 'நாடகத்தமிழ்' எனுங் கட்டுரையில் வரலாற்றடிப்படையிலே சிலப்பதிகாரந்தொட்டு இக் காலம் வரையுள்ள நாடகச் செய்திகள் பலவற்றைத் தேர்ந்து திரட்டியுள்ளார் பேராசிரியர்.

பழங்காலத்திலிருந்த முறுவல், சயந்தம், குணநூல், செயிற் றியம், பரதம், மதிவாணர் நாடகத்தமிழ் நூல் போன்றவை

0-,6 i8
N89

நமக்குக்கிட்டாத நிலையில், இக் குறையை ஒருவாறு போக்கக் கருதி முனைந்து உழைத்தவர் சூரிய நாராயண சாத்திரியார். பரிதிமாற் கலைஞராகிய அவரியற்றிய 'நாடகவியல்' என்பது நாடக இலக்கண நூலாகும். அதற்கேற்பச் சில நாடகங்களையும் இயற்றியுள்ளார் என்பதைக் குறிப்பிடும் பேராசிரியர், 'இச் செயல் இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் அமைத்தல் என்ற மரபினின்று மாறுபட்டதேயாம்' என்ற தம் கருத்தையும் திறனாய்வு அடிப்படையில் துணிந்து உரைக்கிறார் அவர். மேலும், அந்த நூலைத் தெள்ளிதின் ஆராய்ந்து, ''நாடகத்தை முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என்ற ஐந்து சந்திகள் உடையதாகக் கூறியது சமற்கிருத 'தசரூபக' மரபை ஒட்டியதாகும். எண்சுவை கூறும் தமிழ் மரபோடு 'சம நிலை' என்ற ஒன்றைக்கூட்டி உரைத்ததும் வடநூல் மரபு. நாடகத் தலைவர் நன்னான்கு வகையினர் என வகுத்ததும் அம்மரபை ஒட்டியேயாகும். நாடகத்தை நாடகம், பிரகரணம் முதலாகப் பத்துச் சாதியாகப் பிரித்ததும், சூத்திரதாரனுடைய காதலியே நடி என வரையறை செய்ததும் அந்நூன்மரபை யொட்டியதேயாகும்'' என்ற கருத்தை வெளியிட்டுள்ளார். தொடர்ந்து, அந்த ''இலக்கணத்திற் பல மேனாட்டார் மரபுகள் தமிழ் நாட்டிற்கெனச் சொல்லப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, இடப்பொருத்தம், காலப்பொருத்தம், செயற்பொருத்தம் (Unity of Time, place and action) எனப் பொருத்தம் வகுத்ததையும், கதாந்தம் இருவகைப்படும் என்று சொல்லி நற்பொருளிறுதி, ''தீப்பொருளிறுதி (Comedy and Tragedy) எனப் பிரித்ததையும் கூறலாம்'' என்று திறனாய்வு புரிகிறார் பேராசிரியர். ஆக, இக்காலத்து நாடகத்தமிழ் என்பது தமிழ்மரபுகளுடன் வடமொழிமரபுகளையும் மேனாட்டு மரபுகளையும் இணைத்துக்கொண்டு விளங்குகிறது என்னும் கருத்தைத் தேர்ந்துரைக்கிறார் செந்தமிழ்க் காவலர் எனலாம்.

இலக்கியத்திறனாய்வுச் சிந்தனை

நாட்டு வளர்ச்சியின் நல்ல அடையாளங்களான இலக்கியங்கள் பல்வேறு வகைமைகளிலும் கொள்கை-கோட்பாடு அடிப்படைகளிலும் பல்கிப்பெருகிக்கொண்டேயிருத்தல் வேண்டும். இலக்கிய வரலாற்றுணர்வுடன் சிறந்த இலக்கியத்திறனாய்வு நடை-

காப்பக நூலகம் 600 009
132983

பெறுமேயானால் இலக்கியப் படைப்புக்களும் நன்கு அமையும். எனவே, இலக்கியப் படைப்பாற்றலை மிகுவித்து ஊக்குவிக்கும் வண்ணம் இலக்கியத்திறனாய்வில் அறிஞர்கள் நாட்டஞ்செலுத்தி வருகின்றனர். இதனை நன்குணர்ந்த செந்தமிழ்க் காவலர் இலக்கியத் திறனாய்வுச் சிந்தனைகளால் தமிழிலக்கியவுலகத் திற்குச் சீரிய தொண்டு புரிந்துள்ளார் எனலாம்.

சங்க இலக்கியங்களிலும் இடைக்கால இலக்கியங்களிலும் இக் கால இலக்கியங்களிலும் காய்தல் உவத்தலின்றித் தம் ஆராய்ச்சித் திறத்தைப் புலப்படுத்திப் பல அரிய கருத்துக்களை வழங்கியுள்ளார். திருக்குறளிடத்தும் சிலப்பதிகாரத்திடத்தும் அவர் கொண்ட ஆய்வு ஈடுபாடு தனித்தன்மை வாய்ந்தது எனலாம்.

'தமிழ் காட்டும் உலகு' எனும் நூலில் 'திருவள்ளுவர் அருங் கருத்துக்கள்' என்ற கட்டுரை உள்ளது. அதனில் மக்கள் தம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல கருத்துக்கள் சிலவற்றைத் தொகுத்துத்தர முனைகிறார் பேராசிரியர். யாவரிடத்தும் இன் முகங்காட்டி இன்சொல் கூறுமியல்புடைய அவர், அக்கட்டுரையில் முதற்கண் 'அணி' பற்றி ஆராய்கையில், ''அணி என்ற உடனே பொன்னாலும் மணியாலுஞ் செய்யப்பட்ட பலவகைக் கலன் களையே நினைத்தல் இயல்பு. ஆனால், வள்ளுவர் கருத்துப்படி நோக்குவோமாயின் அக்கலன்களையே யன்றி வேறு பல கலன்கள் சிறந்தனவுள என்பது புலப்படும்.

பணிவுடையன் இன்சொல னாதல் ஒருவற்கு
அணிஅல்ல மற்றுப் பிற (95)

என்னுங் குறளில் குறிக்கப்படுங் கலன்கள் பணிவுடைமையும் இன் சொல்லுடைமையும் ஆம். பணியத் தக்காரைக் கண்டுழிப் பணிதல் என்பது மாந்தர்க்கு ஏற்ற அணியாகும்; பணியாது செருக்கித் தருக்கித் திரிவோர் எத்துணைக் கலன்களை பூண்டிருப்பாராயினும் அணியுடையவராக மாட்டார். பணியத்தக்கார் இன்னாரென்பது மாந்தர் தம்முள் ஆராய்ந்து முடிவு செய்துகொள்ள வேண்டிய தொன்று. தாய், தந்தை, அரசன், ஆசிரியர், குரு எனப்படுவார் வணங்குதற்குரியவர் எனக் கூறப்படுதலுமுண்டு. ஆனால், இன் சொல் கூறத் தக்காரைக்கண்டு கூறவேண்டும் என்பது நியதியன்று

இன்சொல் யாவர்மாட்டும் வழங்குதற்குரியது'' என விளக்கிச் செல்கிறார்.

'தொடர்ந்து. ''குண நலமில்லாதவர்களின் புறவழகால் பயனில்லை என்பதையும், உண்டுடுத்து உறங்குவதோடு வாழ்க்கை முற்றுவதில்லையென்றும், விருப்பம் செயல் அறிவுகளால் வாழ்க்கை மதிக்கப்படும்'' என்பதையும் கூறி, அறிஞர் பெய்லி (Bailey) என்பவரின் கருத்தை—''செயலால் வாழ்வது; ஆண்டினால் அன்று. உள்ளத்தால் வாழ்வது; உயிர்ப்பினால் அன்று. உணர்ச்சியால் வாழ்வது; நாழிகையால் அன்று''என்பதை—இயைபுடன் எடுத்துக் காட்டுகிறார் பேராசிரியர். இவ்வுண்மையினைத் திருவள்ளுவர் தமது நூலில் அழகுடன் போற்றி அமைத்துள்ளார் என்கிறார்; அஃதாவது, உணர்ச்சி, சிந்தை, செயலாகியவற்றால் வாழ்க்கை நோக்கப்படும் என்னும் வள்ளுவச் செய்தி (கருத்து) பல இயல்களிற் பரவி வருவதைக் காணலாம் எனக் கூறுகிறார்.

வாழ்வின் தொடர்ச்சியிலே...வளர்ச்சியிலே-ஒவ்வொருவருக்கும் உயர்ந்த குறிக்கோளிருத்தல் வேண்டும்; இதனை மிக நயமாகக் கூறிச் செல்கிறார் பேராசிரியர். ''தமது நிலையின் மேன் மேலுயர்ந்து நிற்க விழையும் ஒவ்வொருவரும் குறிக்கோளை உயரியதாக அமைத்துக்கொள்வதால் வருவது பெருமையேயொழிய வேறன்று. சுண்டெலியைப் பிடித்திடுவதிலும் ஆளியோடு பொருது அடலின்றி மீளல் தாழ்ந்ததேயோ? கைகூடுவது சிறியதேயாயினும் கைகூடாப் பெரியதினும் சிறந்ததேயன்றோ என வினவுவார் இருப்பர். ஒவ்வொருவரது முயற்சியும் நினைப்பும் செயலும் எல்லாம் ஒன்று சேர்த்து வெற்றி அறியப்படுமேயன்றிச் செய லொன்றினால் அன்று என்பதை மனத்தில் முதற்கண் நிறுத்தல் வேண்டும். எதனை வென்றார் என்ற வினா எழுமுன், எத்துணை இடுக்கணைப் பொடியாக்கி வென்றார் என்றும், எத்தகைய முயற்சியால் வென்றார் என்றும் கேட்டல் பெரியோர் இயல்பு'' எனப் பேராசிரியர் கூறுகையில், 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' 'உரமொருவற்குள்ள வெறுக்கை', 'கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது' என்பன போன்ற வள்ளுவக் கருத்துக்கள் இழையோடி நிற்கக் காணலாம். மேலும், இதற்கு அரண்சேர்க்கும் வகையில், ''முயல்க, நன்றாக முயல்க; சிறந்ததில் முயல்க; மிகச் சிறந்ததில் முயல்க. வெற்றி யென்பது ஒரு

பொருளன்று; முயற்சியே எப்பொருளும் ஆம்'' என்று இராபர்ட்டு பிரௌனிங்கு நல்லுரையைக் கூறித் திருக்குறள் மொழியோடு இணைத்துப் பொறித்து வைத்துச் செயற்படுத்த முற்படுதல் மிக நல்லது எனவும் உணர்த்துகிறார்.

'செல்வங்கள்' (தமிழ் காட்டும் உலகு) எனுங் கட்டுரையில் 'உடைமை' பற்றி மிக நேர்த்தியான ஆராய்ச்சி புரிகின்றார் செந்தமிழ்க் காவலர். திருக்குறள் முழுவதையும் ஆராயின் 'உடைமை'யென முடியும் அதிகாரங்கள் பத்து உள்ளன. அவை, அடக்கமுடைமை, அருளுடைமை, அறிவுடைமை, அன்புடைமை, ஆள்வினையுடைமை. ஊக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, நாணுடைமை, பண்புடைமை, பொறையுடைமை எனப்பலரும் அறிவர். இவற்றுள் உடைமைகள் சிலவற்றை ஆராய்கையில் ஊக்கமுடைமை, அருளுடைமை, அன்புடைமை என்பனவற்றில் பேராசிரியருக்குப் பெரிதும் ஈடுபாடு இருத்தலைக் காணலாம். எனினும், கடவுட் சார்பாக நோக்குமிடத்துச் செல்வங்கள் யாவினும் மிகச் ச்.றந்தது 'வேண்டாமை'யாகிய விழுமிய செல்வமே என்பதை யும் பேராசிரியர் கருதுகிறார். இக்கருத்தினை அவர் விளக்கிச் செல்கையில்,

> 'வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
> ஆண்டும் அஃதொப்ப தில்' (363)

எனுங் குறட்பாவைச் சுட்டிக்காட்டி, மக்கள் கடவுளிடத்திலும் ஒன்று வேண்டாமலிருப்பது நல்லதுஎன்பதையும் எடுத்துரைக்கிறார். இதற்கு அரண்சேர்க்கும் வண்ணம், ''நான் இன்னது செய்தால் இன்னது தருக என்று கடவுளிடத்திற் கேட்க மாணிக்க வாசகருக்கு விருப்பில்லை; அதனால்,

> 'வேண்டத் தக்க தறிவோய் நீ,
> வேண்ட முழுதுந் தருவோய் நீ,
> வேண்டும் அயன்மாற் கரியோய் நீ,
> வேண்டி யென்னைப் பணிகொண்டாய்,
> வேண்டி நீயா தருள்செய்தாய்
> யானும் அதுவே வேண்டினல்லால்
> வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
> அதுவும் உன்றன் விருப்பன்றே'

என்று பாடினார். ஒருவர் வேண்டுவது முழுதையும் கடவுள் தரத் தக்கவர் ஆனாலும், இன்னார்க்கு இன்னது தருதல் நல்லது என்பதை அவரே நன்கு அறிவர் என்றும், இதனின் நீங்கலாகக் கடவுளே ஒருவரை நோக்கி 'உன்னால் வேண்டப்படுவது யாது?' என்று கேட்டாலுங்கூடக் கடவுள் விருப்பத்திற்கு விட்டுவிட வேண்டும் என்று கூறக் கருதிய மாணிக்கவாசகர், அவ்வாறு பேசினார் என்பது வெளிப்படை'' என்று எழுதிச் செல்வது மிகவும் போற்றுதற்குரியதாகும்.

சிலப்பதிகாரத்தில் தனிநாட்டமுடையவராய் அதனைப் பல கோணங்களில் திறனாய்வடிப்படையிலே கட்டுரைத்துள்ளார் பேராசிரியர். அக்கட்டுரைகளுள் பெரும்பாலானவை 'இளங்கோ வின் இன்கவி' எனும் நூலில் இடம் பெற்றுள்ளன.

கண்ணகியைப் பத்தினிப் பெண் என்று மட்டுமே காட்டாமல், பத்தினித் தெய்வமாகக்—கற்புக் கடம்பூண்ட கடவுளாகக் காட்ட இளங்கோவடிகள் முயல்வதைப் 'பத்தினிக் கடவுள்' எனுங் கட்டுரையில் சித்திரித்துக் காட்டுகிறார்.

''பெண்டிரிற் சிலர் கணவன் சொல்லிய சொல்லுக்கு எதிர் மறுத்துப் பேசாமல் இருந்தமையினாலே பத்தினியர் எனப் பேசப் படுவது உண்டு. கற்பினைச் சோதிக்க மனித வடிவத்திற் கடவுளோ மனிதரோ வந்து சோதித்து அழிவுறாமையால் சிறந்தவர்களென மதிக்கப்பட்ட நங்கையர் சிலர் பத்தினியரெனப் பேசப்படுவது உண்டு. கணவன் இறந்தவுடனே அலறிப்புடைத்து விழுந்து உயிர் விட்டமையினாலே பத்தினியர் எனப் பெருமை பாராட்டப்படுபவர் சிலர் உண்டு. அவர்களின் வேறாகக் கண்ணகியை இளங்கோ வடிகள் கண்டதால், கண்ணகியாரைப் பொருவறு பத்தினியார் என்று கூறியுள்ளார் என்பது தெரியவருகிறது'' எனக் கூறிக் கண்ணகியின் தெய்வநிலைக்குச் சிறந்த அரணான கருத்துக்களைத் தேர்ந்து மொழிகிறார்.

தன் செங்கோல் கோடியதை யுணர்ந்து ஆராயாமல் செய்த தன் தவற்றினை ஒப்புக்கொண்டவுடனே உயிர் விட்டான் பாண்டியன் நெடுஞ்செழியன்; அவனது உயிரைத் தேடிச் சென்றவள் போல உடனே உயிர்விட்டாள் கோப் பெருந்தேவி. அவள் ஒரு புறமிருக்க, தன் கணவனுக்குத்

தீங்கு நேரிட்டதைக் கேட்டதும் கொதித்தெழுந்து, தீங்கிழைத் தோரிடத்தில் நியாயம் கேட்டுத் தன் கடமையைச் செய்து முடித்ததும் சேர நாட்டிற்குச் சென்றாள் கண்ணகி. பிறகு, இந்த இருவர்தம் சிறப்பினையும் சீர்தூக்கிப் பார்க்கக் கூடிய சூழல், சேரன் செங்குட்டுவனுக்கும் அவனுடைய மனைவிக்கும் ஏற்படலா யிற்று. அப்போது செங்குட்டுவன் மனைவி,

'காதலன் துன்பங் காணாது கழிந்த
மாதரோ பெருந்திரு வுறுக வானகத்து;
அத்திறம் நிற்கநம் அகனாடு அடைந்தவிப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்'

என மொழிந்ததாகச் சித்திரித்துக் காட்டுகிறார் இளங்கோ.

கண்ணகியைச் சிறந்த பத்தினிக் கடவுளாகக் காட்ட முன்கூட்டியே திட்டமிடும் இளங்கோ, அதற்கேற்பக் காப்பியப் போக்கில் பல்வேறு இடங்களை நேர்த்தியாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

வேட்டுவ வரியில் கண்ணகியின் மேம்பாடு தெய்வமேறப் பெற்ற வேட்டுவச் சாலினியால் உணர்த்தப்படுகிறது. கண்ணகி யைச் சாலினி குறிப்பிடுகையில்,

'இவளோ கொங்கச் செல்வி குடமலையாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து
ஒருமா மணியாய் உதகிற் கோங்கிய திருமாமணி'

என உரைத்துக் காட்டுகிறாள். இப்பகுதிக்கு உரை எழுதிய அரும்பதவுரைகாரர் 'மேற்பட்டு இவளைத் தெய்வமாகக் கொண்டாடுமிடங் கூறினபடியாலே, இவள் துர்க்கையாகவே சேர நாட்டிற் பிறந்தாளென்றவாறு' எனக் குறிப்பிடுவதைச் சுட்டி, அதற்கு விளக்கங் காண்கிறார் பேராசிரியர்.

சிலர் கண்ணகியைத் துர்க்கையாகவே தொடக்கத்திலிருந்து கடைசி வரை காட்டுவதும் உண்டு. ஆனால், இளங்கோ சிலப்பதிகாரத்தில் எந்த இடத்திலும் கண்ணகியைத் துர்க்கையின் அவதாரமென்று கூறவேயில்லை; அவளுடைய பிறப்பைப் பற்றிச்

சொல்லும் முதற் காதையாகிய மங்கல வாழ்த்துப் பாடலில் அவள் திருஅவதாரஞ் செய்தாள் என்று சொல்லவேயில்லை என்கிறார் அவர்.

வழக்குரை காதையில், கண்ணகியின் உருவத்தைக் கண்டு மயங்கிய ஒருவன் பாண்டியனுடைய வாயிற் காப்போன்—அவள் துர்க்கையோ காளியோ பிடாரியோ என மயங்கினான் என்பது உண்மையே. எனினும், சிலர் தவறாக வுணர்ந்து கொண்டவர்களாய்க் கண்ணகியைத் துர்க்கையாகவே கருதுமாறு கூறி வருகின்றனர் என்று வருந்துகிறார் பேராசிரியர். அஃதாவது, "...... தவறாக உணர்ந்து கொண்டமையாற்போலும் சிலர் கண்ணகியைத் துர்க்கையின் அவதாரமாக்கியுள்ளார்கள். அக்காரணத்தினால்தான் கண்ணகி உமாதேவியாரின் அவதாரமென்றும், ஏதோ ஒரு சாபத்தினால் உலகில் வந்து உதித்தாள் என்றும், அந்தச் சாப விடுதலை நேரத்தில் திடீரெனப் பண்டைய வடிவு பெற்றுச் சிலையாகச் சமைந்து விட்டாள் என்றும் சிலர் திரைப்படங்களிற் காட்டியுள்ளார்கள். உண்மையில், கண்ணகி இவ்வுலக மகளிருள் ஒருத்திதான் என்பதும், கணிகை மகள் மாதவியினிடத்தில் தங்கித்தன்னைக் கோவலன் புறக்கணித்த வேளையிலும் அவனைச் சினவாது அவன் உளத்தைத் திருத்த உழைத்து வெற்றி கண்ட பெருமகள் என்பதும் சிலப்பதிகாரத்தைச் செம்மையாகப் படிப்பவர்களால் உணரப்படும்" என்றும் கூறிச் செல்கிறார்.

இத்தகைய புகழுக்குரிய கண்ணகி, துறவி கவுந்தியடிகளாலும் துறவி இளங்கோவடிகளாலும் மிகச் சிறப்பாகப் பாராட்டப்படும் இடங்கள் சிலப்பதிகாரத்தில் உள்ளன; அவற்றையும் பேராசிரியர் தக்கவாறு எடுத்துக் கூறியுள்ளார்.

கண்ணகியின் அருமையுணர்ந்த கவுந்தியடிகள், அவளை ஆயர்குல மாதரியிடம் அடைக்கலப்படுத்துகையில்,

'என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்
கடுங்கதிர் வெம்மையிற் காதலன் தனக்கு
நடுங்குதுய ரெய்தி நாப்புலர வாடித்
தன்றுயர் காணாத் தகைசால் பூங்கொடி
இன்றுணை மகளிர்க் கின்றி யமையாக்

கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்'

எனப் போற்றியுரைப்பது மனங்கொள்ளத் தக்கதாகும்.

கோவலன் கொலையுண்ட நிலையில் கண்ணகி பொங்கிய சீற்றத்துடன் பெருந்தெருவிலும் குறுந்தெருவிலுமாக நிலை குலைந்து சென்று கொண்டிருக்கிறாள் என்பதை,

'காதலற்கு எடுத்த நோயொடு உளங்கனன்று
ஊதுலைக் குருகின் உயிர்த்தனள் உயிர்த்து
மறுகிடை மறுகும் கவலையிற் கவலும்
இயங்கலும் இயங்கும் மயங்கலும் மயங்கும்
ஆரஞர் உற்ற வீரபத்தினி'

என மொழிந்து காட்டுகிறார் இளங்கோவடிகள். ஆக, இவ்வாறான புகழுக்குரிய கண்ணகி, வீரபத்தினியாகவும் பத்தினிக் கடவுளாகவும் போற்றப்படுவது முறையானதே எனக் கருதுகிறார் செந்தமிழ்க் காவலர். எனவே, ''இப்பத்தினிக் கடவுளை நம் நாட்டிலும் பிற இடங்கள் சிலவற்றிலும் கோயிலில் வைத்துக் கும்பிடுகிறார்கள்'' எனக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறெல்லாம் திறனாய்வு நோக்கில் எழுதிச் செல்கையில் செந்தமிழ்க் காவலரின் நுண்மாண்நுழைபுலமும் செம்மையான ஆராய்ச்சித் திறமுங்கண்டு போற்றலாம். இதே வண்ணம் இவர் புரிந்திடும் சில இலக்கிய ஆய்வுச் சிந்தனைகளைக் காண்போம்.

'தமிழ்காட்டும் உலகு' எனும் நூலில் 'குறுந்தொகை' எனுங் கட்டுரையில், ''இதனை நல்ல குறுந்தொகை எனப் பழமை யோர் பாராட்டியிருக்கிறார்கள் ... வேலினையுஞ் சேவற் கொடியினையு முடைய முருகக் கடவுள் பாதுகாப்பதால், உலகம் இடையூறின்றி இருக்கிறது என்ற கருத்தமைந்த கடவுள் வாழ்த்துச் செய்யுளை முதற்கண் வைத்து இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது'' எனக் கூறியபின், நூலகத்துள்ள அகத்திணைச் செய்திகளுள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்துத் திறனாய்வு புரிகின்றார்; அவற்றுள் சில காண்போம்.

''ஒரு தலைவி தன் தலைவனுடைய இல்லத்துக்குச் சென்றபின் சமையற் பொறுப்பில் ஈடுபடுகிறாள். ஒரு நாள் பதங்கெடாமல் மோர்க் குழம்பை வைக்கவிரும்பிய விருப்பத்தால் தயிரைப் பிசைந்த கையென்றும் பாராமல் புதிய தன் புடவையில் துடைத்துக்கொண்டு தாளிப்பு வேலையைச் செய்து, துழாவியெடுத்துக் கணவனுக்கு உணவு படைக்கிறாள். 'அவனும், இனிதாக இருக்கிறதே, இக் குழம்பு அமிழ்தம்'எனக் கூறி உண்கிறான். அவள் முகத்தில் நுண்ணிதாம் மகிழ்ச்சி நிலவுகிறது. இக்காட்சியை எல்லாம் அங்கு அப்பொழுது வந்து சேர்ந்த தலைவியின் செவிலித் தாய் அவ்விருவரும் அறியாமற் கண்டு மகிழ்கிறாள்'' என விளக்கிச் செல்கிறார் பேராசிரியர். இதனால், இல்லறத்திலே தலைமக்க ளிடத்தில் எவ்வாறு மெல்லியல்பில் அன்புநிலவ வேண்டுமென்பதை மிக நயமாகப் புலப்படுத்திக் காட்டுகிறார் என அறியலாம்.

தலைமக்களிடம் அன்பு சீரான நிலையில் இருப்பதால் இல்லற இன்பம் நாளும் சிறக்கும்; அஃதன்றித் தலைவனிடம் மாறுபாடு தோன்றின் தலைவியும் தோழியும் மனம்நொந்து அலமந்து துடிக்க நேரிடும். தலைவனொருவன் சிலநாட்களாக வீட்டிற்கு வருவதில் காலந்தாழ்த்தமையால், தலைவி சார்பாகப் பரிந்துகொண்டு தோழி, ''முன்பெல்லாம் தலைவி வேப்பங் காயைக் கொடுத்தாலும் வெல்லக்கட்டி என்று பாராட்டினீர்; இப்பொழுதோ, குளிர்ந்த இனிய தண்ணீரைத் தந்தாலும் (வெறுக்கத்தக்க) வெந்நீரெனக்கூறி வெறுக்கின்றீர்! உம் அன்பு இவ்வாறிருந்தது'' எனக் கூறி அவனை நல்வழிப்படுத்துகிறாள் என்பதைக் கூறிக்காட்டுகிறார் பேராசிரியர்.

ஒரு குறுந்தொகைப்பாடலில் தலைவி, 'பலநாள் என்னோடு பழகினதால் நான் உமக்குப் புளிப்பு ஆனேன் போலும்! என்னை வெறுப்பதாய் இருந்தால் என் தாய்வீட்டிலே கொண்டுபோய் விட்டு விடுக' என்று கேட்க விரும்புவது சித்திரிக்கப்படுகிறது.

> ''நீர்நீ டாடிற் கண்ணுஞ் சிவக்கும்
> ஆர்ந்தோர் வாயில் தேனும் புளிக்கும்
> தணந்தனை யாயினெம் இல்லுய்த்துக் கொடுமோ'

எனவரும் இப்பாடற்பகுதியில் தலைவி தன் தலைவனிடம் பேசு கையில் 'நான் தாயார் வீட்டுக்குப் போவேன்' என்று நேரடி

யாகச் சொல்லவில்லை; எனினும், 'எங்கள் வீட்டிலே கொண்டு போய்ச்சேர்ப்பாயாக' எனக் கூறுகிறாள் என்பது பெறப்படும். இந்தப் பகுதியை மிக நயமாக ஆராய்ந்து அரிய விளக்கங் களைத் தருகிறார் பேராசிரியர்; அதனைச் சிறிது காணலாம்.

''உய்த்தல் என்ற சொல்லிற்குக் கொண்டு போய்ச் சேர்த்தல் என்பது பொருள். வீடு வரையிற் கொண்டுபோய் விட்டுவிட்டு உட்புகாமலே தலைவன் ஓடி வருதல் முடியாது. ஏனென்றால், தலைவி 'இல்லுய்த்துக் கொடு' எனக்கேட்கிறாள். ஆதலால், வீட்டிற்கொண்டு சேர்த்து என் தந்தையிடம் என்னை ஒப்படைப்பாயாக எனக் கூறுகிறவள் 'கொடு' எனக் கூறுகிறாள். இதில் எத்துணை நயம் இருக்கிறது! 'தாய்வீடு போகிறேன்' என்றாலே, 'போகாதே' எனத் தலைவன் தடுத்து விடுவான். ஆதலால், தலைவி தாய்வீடு போதல் இல்லை. 'உடன்வா' என்றதால் உடன் செல்லுகின்றவன் தலைவியின் மனத்திலுள்ள பிணக்கத்தை வழியில் மாற்றிவிடக்கூடும். ஆதலாலும், தாய்வீடு போதல் இல்லை. வீட்டிற் கொண்டுபோய் விடுத்த அளவே அல்லாமல், தலைவியின் தந்தையிடம் அவளைச் சேர்ப்பித்து வரத் தலைவன் கூசுவான், நாணுவான், அஞ்சுவான். ஆதலாலும் தாய்வீடு போதல் இல்லை. எனவே, 'எம்இல் உய்த்துக் கொடுமோ' என்று தலைவி கூறியது வெறும் மருட்டல். உண்மையில், தாய்வீடு திரும்ப அவளுக்கு ஆசை யில்லை. கணவனுடன் இருக்க வேண்டும் என்பதே அவள் விருப்பம். ஆனால், கணவனைத் தன் வழிப்படுத்தவே இச் சொல் எழுகிறது. 'எம் இல் உய்த்துக்கொடுமோ' எனக்கூறி 'என்னைத் தகப்பனாரிடம் சேர்த்துவிட்டுத் திரும்புக, உமக்கு அங்கு வேலையில்லை' என்பாள்போல, 'எம்இல்' என வைத்துப் பேசிய இதனை நினைக்குந்தோறும், ''நவில்தொறும் நூனயம் போலும்' எனத் திருவள்ளுவர் எடுத்தாண்ட உவமை யின் நயம் மனத்தைக் கொள்ளை கொள்ளுகிறது'' என்கிறார் பேராசிரியர்!

இவ்வாறாகப் பல இலக்கியங்களிலிருந்தும் பல செய்யுட் களுக்கு நயமான விளக்கந்தந்துள்ளார். பெண்பாற் புலவர்கள் பாடியுள்ள செய்யுட்கள் பலவற்றிற்குத் திறனாய்வு காண வேண்டும் என்பதும் பேராசிரியரது உட்கிடை. அவ்வாற்றான் 'புலவர் மகளிர் சிலர்' (முன்பனிக் காலம்) எனுந் தலைப்பில்

காக்கை பாடினியார் நச்செள்ளையார், ஒக்கூர் மாசாத்தியார், வெண்ணிக் குயத்தியார், மாறோக்கத்து நப்பசலையார் பாடிய செய்யுட்களிலிருந்து நயமான பகுதிகளைத் தேர்ந்து ஆய்வு புரிந்துள்ளார் பேராசிரியர். அவற்றுள் காக்கை பாடினியார் பாடிய பாக்களுள் ஒரு பாடலின் பகுதிக்கு அவர் நயங்காண்பதை நோக்குவோம். பதிற்றுப்பத்தில் ஆடுகோட் பாட்டுச் சேரலாதனைக் காக்கை பாடினியார் வாழ்த்தும் பகுதிகள் பலவாக உள்ளன; ஓரிடத்தில்,

> '............... ....எனையதூஉம்
> உயர்நிலை புலகத்துச் செல்லாது இவணின்று
> இருநில மருங்கின் நெடிதுமன் னியரோ (614)

எனும் பகுதிக்குப் பேராசிரியர்காணும் செய்யுள்நயம் மிகவும் போற்றத்தக்கது.

''அவனது கொடைச்சிறப்பால் அவன் வானுலகடையும் தகுதியுடையவன் என்பதும், வானுலகில் ஈவோரும் ஏற்போரும் இல்லையாதலால் இவ்வுலக வாழ்வே நலம் பயக்கும் என்பதும், அவன் விண்ணுலகு சேர்ந்துவிட்டால் உலகில் இரவலரைப் பாதுகாப்போர் அவன் போன்றோர் பிறர் இல்லை என்பதும், மேன்மேலும் அவன் ஈதலாகிய அறத்தையே செய்து கொண்டிருப்பதால் என்றும் அவனுக்கு வானுலகு கிட்டுமாதலின் இப்பொழுது அங்கு எய்தாததால் அவன் இழப்பது ஒன்றுமில்லை என்பதும், அவன் இங்கு இருப்பதால் இரவலர் பெறுவன பல என்பதும் எவ்வளவு நயமாக இங்குக் குறிக்கப்பெற்றுள! இப்புலவர் இலட்சம் பொற்காசு பெற்றது இவ்வொரு பாட்டுக்காக இருந்தாலும் தகும் என்று சொல்லலாம்'' என்று சேரலாதனது பெருமையையும் புலவர் திறத்தையும் ஒருங்கே நினைந்து பாராட்டச் செய்கிறார்.

ஒப்பிலக்கிய ஆய்வுச் சிந்தனை

இக்காலத்தில் ஒப்பியலாய்வே கலையுலகிலும் இலக்கிய வுலகிலும் உயர்ந்த ஆய்வாகக் கருதப்படுகின்றது. முறையான ஒப்பியலாய்வுக்கு வித்திட்ட முன்னோடிகளில் ஒருவர் செருமானிய

நாட்டுப் பேரறிஞர் மாக்சுமுல்லர் என்பர். 'ஒப்பீட்டாலேயே எல்லா உயரறிவும் பெறப்படுகிறது; அவ்வறிவும் நிலைநிறுத் தப்படுகிறது' (All higher knowledge is gained by Comparison, and rests on comparison - Max Muller, Lectures on the Science of Religion, p. 12) என்பது அவர்தம் கருத்துரை யாகும்.

இலக்கியத்தரத்தை மதிப்பிடும் ஒப்பிலக்கிய ஆய்வில் இரு வகையுண்டு. ஒரு மொழியிலக்கியங்களுக்குள்ளே ஒப்பீடு செய்து ஆராய்வது ஒருவகை; ஒரு மொழி இலக்கியத்தைப் பிறமொழி இலக்கியங்களுடன் ஒப்பிட்டு மதிப்பீடு புரிவது மற்றொருவகை. இவ்விருவகையிலும் தேர்ந்த ஆய்வு புரிந்து அரிய கட்டுரைகளை வழங்கியுள்ளார் செந்தமிழ்க் காவலர்.

'இராமலிங்க அடிகளும் ஒருமைப்பாடும்' (செங்கோல்வேந்தர்) எனுங் கட்டுரையில் திருவருட்பிரகாச வள்ளலாரும் இரவிந்திரநாத தாகூரும் ஆன்மிகக் கருத்துக்கள் பலவற்றால் ஒப்புநோக்கத்தக்க வர்கள் என்பதை இயைபுடன் ஆராய்கிறார்; 'தாகூரும் தமிழிலக்கி யங்களும்' (செங்கோல் வேந்தர்) எனுங் கட்டுரையில் தாகூரின் உயரிய நோக்கங்களையும் தாகூரிடம் ஈடுபாடு கொண்ட மகாகவி பாரதியார், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை முதலியோரின் கருத்துக்களையும் தேர்ந்து ஒப்பிட்டு நேர்த்தியான ஆய்வு புரிந்துள்ளார்; 'திருக்குறளும், சிலப்பதிகாரமும்' (தமிழ் காட்டும் உலகு) எனுங் கட்டுரையில் இரு நூல்களிலும் காணலாகும் ஒப்புமைக் கருத்துக்களைச் சீர்தூக்கிப் பார்த்தலையும், சிலப்பதி காரத்தில் எவ்வாறெல்லாம் திருக்குறளின் தாக்கம் அமைந்துள்ள தென்பதையும் நன்கு ஆராய்ந்துள்ளார். இவையேயன்றிப் பேராசிரியர் தம் கட்டுரைகளில் வாய்ப்பு நேர்ந்தபோதெல்லாம் ஒப்பிலக்கிய ஆய்வுக் குறிப்புகளைத் தந்து ஆய்வுத் திறனைப் புலப்படுத்தியுள்ளார்.

ஒப்பிலக்கிய ஆய்வுநோக்கில் சில கருத்துக்களைக் காண்போம்.

ஒருமைப்பாடு நேயவுணர்ச்சியினால் ஆக்கத்தக்கது என்பதை யும் பகைச் செயல்களினால் ஆக்க வொண்ணாதது என்பதையும் வள்ளலாரும் தாகூரும் உணர்த்துகின்றனர் என்பதைக் குறிப்பிடு கையில், ''தாகூர் பன்மையில் ஒருமைகாண விழைந்தார்;

பன்மையை ஒருமையாக்கிவிடவில்லை. அவ்வாறே, இராமலிங்க அடிகளாரும் உலகத்திலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளிடையே எவ்வாறு அன்பினால் ஒருமைப்பாட்டினை விளைக்க முடியும் என்று ஆய்ந்தாய்ந்து முயன்றவர் என்பது அறியத்தக்கது'' எனச் சுட்டி,

ஒற்றுமை வேற்றுமை யுரிமைக ளனைத்தும்
அற்றென வகுத்த அருட்பெஞ் சோதி

என்ற வள்ளலாரின் வாக்கினையும் நினைவுபடுத்துகிறார் பேராசிரியர்.

'தாகூரும் தமிழிலக்கியங்களும்' எனுங் கட்டுரையில் தாகூரின் கருத்துக்களை ஆராய்கையில், ''பாரதியார் கண்ணனைத் தந்தையாக, தாயாக, ஏவலனாக, மனைவியாக, தோழனாகக் கருதிக் கருதிப்பாடிய பாடல்களில் தாகூரின் போக்குக் காணப்படாமல் இல்லை. விண்மீன்களில் கடவுளைக் காண்டலைவிட மனிதனுடைய ஆன்மாவில் கடவுளைக் காணுதல் கூடும் எனத் தாகூர் கருதினார். 'கடவுளுடைய வீணையில் பல நரம்புகள் உள்ளன; அவற்றுள் சில இரும்பு நரம்புகள்; சில செம்பினால் ஆனவை; சில பொன் நரம்புகள்; மனிதன் கடவுளுடைய வீணையின் பொன் நரம்புகள்' என்று தாகூர் எண்ணிய எண்ணத்தின் எதிரொலி பாரதியாரின் பாடல்கள் பலவற்றுட் காணப்படுகிறது. 'பாரதி அறுபத்தாறு' என்ற தொகுதியிற் காணப்படும் பாடல் ஒன்றினுள் இவ்வுண்மை,

'சாமி நீ, சாமி நீ, கடவுள் நீயே
தத்துவமசி, தத்துவமசி, நீயே அஃதாம்
பூமியிலே நீ கடவுள் இல்லை யென்று
புகல்வது நின்மனத்துளே புகுந்த மாயை'

என்றவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது'' என்றும்,

''எழுதுகோலிலும் எழுத்திலும் கடவுளைக் காணலாம் என்ற பாரதியார் மாதர் தீங்குரற் பாட்டினில், மாதர் எழிலில், மங்கையர் ஒயிலில், மனைவியின் கண் (இடம்), மக்களிடம் கடவுளைக் காணலாம் என்று அடிக்கடி பேசியுள்ளார். தன் மனைவியை அடிமைப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தால் தாய்க்குலத்தை இழிவு செய்வதைக் கூடக் கருதாமல் பொதுவாக மாதர்களை

நூலோர்கள் இழிவு செய்துள்ள மடமையைக் கொளுத்துதல் வேண்டு மென்ற அளவிற்குக் கூடப் பாரதியார் சென்றார். ஆணிலும் பெண்ணிலும் உள்ள ஆன்மா ஒன்றே என்ற பண்டைய உண்மை யைத் தாகூரும் பாரதியாரும் தம் காலத்திற்புதுமெருகிட்டு மக்களிடம் வற்புறுத்தினர்'' என்றும் எழுதிச் செல்வதைக் காண்க.

கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை தாகூரின் கீதாஞ்சலியை அடியொற்றிச் சில பாடல்கள் பாடியுள்ளார்.

''என் பாட்டில் நீ மகிழ்ச்சி கொள்கிறாய் என்பதை அறிவேன், உன் முன்னிலையில் நான் பாடகன் என்ற வகையில்தான் வரு கிறேன் என்பதை அறிவேன்'' என்றும், ''உன்னைப் பற்றிப் பாடும் மகிழ்ச்சிப்பெருக்கில் என்னை மறந்து கடவுளாகிய உன்னை நண்பன் என்று அழைக்கிறேன்'' என்றும் கவிஞர் இரவீந்திரர் பாடினார். இக்கருத்துடன் ஒப்பிட்டுக் காணுமாறு கவிமணி, ''ஏத்தி இசைபாடத் தொடங்குவேன் நீயும் அதில் இன்புறுவை என்பதுணர்வேன்'' என்றும், ''நானும் என் களிமயக்கால் நண்பன் என்றே அழைக்கின்றனன் என்னை யாள், நாதனே! ஞானபரனே!'' என்றும் பாடிச் செல்லுதலைச் சுட்டிக் காட்டுகிறார் பேராசிரியர்.

'திருக்குறளும் சிலப்பதிகாரமும்' எனுங் கட்டுரையில் சில ஒப்பீட்டுக் கருத்துக்களைக் காண்போம்.

> தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யு மழை (55)

என்ற குறளுக்கேற்பச் சிலப்பதிகாரத்திலமைந்துள்ள கருந்துக்களை ஆராய்ந்து, ''இக்குறளுக்கு இத்தகைய பத்தினிப் பெண்ணொருத்தி 'பெய்'யெனப் பெய்கின்ற மழை போன்றவள் என்றுகொண்டு அறிஞர் சிலர் பொருள் கூறி வருகின்றார்கள். எவ்வாறாயினும், இந்தக் குறளின் கருத்து சிலப்பதிகாரத்திற் செவ்வன் அமைக்கப் பட்டிருக்கிறதென்பது போதரும்'' என்றும், ''மதுரையில் மாதரி என்ற இடைக்குலமகள் வீட்டில் தங்கியிருந்து சமைத்துக் கணவனை உண்ணும்படி அழைக்கின்றவள், 'அமுதம் உண்க அடிகள்' என அழைத்தாள் என்பதாகவே அறிகிறோம். அதற்கு முன்னதாக, அவள் அவனுடைய அடிகளைத் தொழுது வணங்கினாள் என்று இளங்கோவடிகள் கூறியுள்ளார்.

'கடிமலர் அங்கையிற் காதலன் அடிநீர்
சுடுமண் மண்டையின் தொழுதனள் மாற்றி' (16;38-39)

என்று வருவதைக் காண்க. இவ்வாறு கணவனை வழிபட்டு வந்த அவள் சொற்கள் பொன்னே போல் போற்றப்பட்டுச் செயற்பட்டன என்பது சிலப்பதிகாரத்தால் இவள் தேவர்களையும் ஏவல் கொண்டாள் என்பது கூறப்பட்டிருக்கிறது'' என்றும் எழுதிச் செல்கிறார். தம் கருத்திற்கு அரண் சேர்க்கும் வகையில், 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்' ஆகிய பத்தினிப் பெண்ணின் கட்டளைக்குத் தெய்வங்களாகக் கருதப்பெறும் ஞாயிறு, அங்கியங்கடவுள், மதுராபுரி தெய்வம், தேவரும் பிறரும் எவ்வாறு எதிர்நோக்கிக் காத்துள்ளனர் என்பதனை அழகுறக் கூறிக் காட்டுகிறார்.

ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு (642)

என்ற குறளுக்கு இயைபாக 'ஆவதும் சொல்லாலே அழிவதும் சொல்லாலே', 'யாரால் கேடு? வாயால் கேடு' எனும் பழமொழிகளைக் காட்டியும், சிலப்பதிகாரத்தில் வரும் சில இடங்களைச் சுட்டியும் ஒப்பியல் ஆய்வு புரிகிறார் செந்தமிழ்க் காவலர்.

'தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கைய தாகில்
கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கென' (16:151-152)

என்பதில் 'கொன்றச் சிலம்பு' என வருவது, 'கொல்லச் சிலம்பு' என்றதற்குப் பதிலாகப் பாண்டிய மன்னனால் கூறப்பட்டதென்பது அறிஞர்களின் கருத்தெனக் காட்டுகிறார். 'கொன்று' என்ற வினையெச்சத்திற்குப் பதிலாகக் 'கொல்ல' என்ற செயவென் எச்சம் வந்தமையால் காப்பியத்தின் போக்கிலே மாறுதல் ஏற்பட்டுள்ளதை எடுத்துக் காட்டுகிறார். அஃதாவது. ''கொன்றச் சிலம்பு கொணர்க'' என்றால், மனிதனைக் கொன்றுவிட்டுச் சிலம்பினைக் கொண்டுவருக என்பது பொருள். 'கொல்லச் சிலம்பு கொணர்க' என்றால், அம்மனிதனைக் கொல்லும் பொருட்டுச் சிலம்பினைக் கொண்டுவருக என்பதுபொருள். பாண்டியனுடைய சொற்சோர்வு காரணமாக அவனுக்குப் பெருங்கேடு நேர்ந்தது என்பது இச்செய்தி

யால் நன்கு உணரப்படும்'' எனக் கூறிக் குறளுக்குத் தக்கதோர் எடுத்துக்காட்டினை விளம்புகிறார்.

இவ்வாறே திருக்குறளிலும் சிலப்பதிகாரத்திலும் புறப்பொருள் தொடர்பில் ஒப்புமைக் கருத்துக்கள் பலவற்றைக் கூறிவரும் பேராசிரியர், அகப்பொருள் தொடர்பிலும் சிலவற்றை எடுத்து மொழிகிறார்.

கானல்வரியில் வருகின்ற இனியபாடலில் 'தலைவியொருத்தி தன்னைப் பிரிந்துள்ள தலைவன் தன்னை மறப்பினும் தன்னால் அவனை மறக்க முடியவில்லையே' என வருந்துகின்ற சூழல் காணப்படுகிறது. அதனைக் காமமிக்க கழிபடர் கிளவி (Pathetic fallacy,யாகச் சித்திரிக்கிறார் இளங்கோவடிகள்.

'தம்முடைய தண்ணளியுந் தாமுந்தம் மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்க
அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாம்மறக்க மாட்டேமால்'

என்ற பாட்டில் அடும்புக் கொடிகளையும் அன்னங்களையும் விளித்துத் தலைவி தன் தலைவனை மறக்க முடியாத நிலையைக் கூறி நிற்பது விளக்கப்படுகின்றது. இதனைப் படிக்குந்தோறும் திருக்குறட் பாக்களாகிய,

'நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாம்காதல் கொள்ளாக் கடை' (1195)

'யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத்(து) எந்நெஞ்சத்(து)
ஓ ஒ உளரே அவர்' (1204)

என்பவை நினைவிற்கு வரும்என விளக்கிச்செல்கிறார் பேராசிரியர்.

இவ்வாறே சிலப்பதிகாரத்திலுள்ள பலகருத்துக்கள் திருக்குறட் பாக்களுடன் ஒப்புமை கொள்ளத்தக்கவையென ஆய்வு நோக்கிலே சுட்டிச் செல்கிறார் அவர்.

இலக்கியத் திறனாய்வாளராகிய செந்தமிழ்க்காவலர் இக்காலப் படைப்பிலக்கியங்களுள் ஒன்றாகிய சிறுகதை பற்றியும் நன்கு ஆராய்ந்துள்ளார்.

'தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்' எனும் நூலும் 'வீட்டுத் திருமகள்' எனும் நூலில் காணும் 'சிறுகதை' எனும் கட்டுரையும் சிறுகதைத் தொடர்பான பல்வேறு ஆராய்ச்சிக் கருத்துக்களைக் கொண்டுள்ளன. இவ்வாற்றான் சிறுகதை பற்றி ஆராயும் ஆய்வாளர்களுக்கு அவை சிறந்த வழிகாட்டியாகப் பயன்படும் எனலாம்.

பொதுவாகச் சிறுகதைகள் மக்களின் பொழுதுபோக்கிற்காகவும் இலக்கிய இன்பத்திற்காகவும் படிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் சிறுகதை என்ற பெயரில் வெளியிடப்படுபவை யெல்லாவற்றையும் சிறுகதையெனக் கூறலாமா என்பது கேள்வி. அஃது எவ்வாறா யினும், சிறுகதை படித்து மகிழும் ஆர்வமும், அது காரணமாகச் சிறுகதைகளை எழுதிக்குவிக்கும் எழுத்தாளர்களின் ஆர்வமும் நாளும் பெருகி வருதலைக் காணலாம். இக்காலத்தில் மக்களின் மனப்போக்கைப் புரிந்துகொண்டு, சிறுகதைகளைப் பெருமளவில் எழுதுமாறு தூண்டுஞ் சக்தியாகப் பத்திரிகைகளும் வெளியீட்டகங் களும் விளங்குகின்றன எனலாம்.

தமிழ்நாட்டிலே தொன்றுதொட்டுக் கதைசொல்லும் வழக்கமும் கதை யெழுதும் வழக்கமும் இருந்து வந்துள்ளன. எனினும், சிறுகதை என்பதன் இலக்கணவரையறைக்கு ஒத்த கதைகள் அண்மையில்தான் உருவாயின என்பது தெளிவு. பஞ்சதந்திரக் கதைகள், மதனகாமராசன் கதைகள், விக்கிரமாதித்தன் கதை, தென்னாலிராமன் கதை போன்ற கதைகள் தமிழ்நாட்டில் பலகாலம் வழங்கிவந்தனவாயினும், அவையெல்லாம் சிறுகதையல்ல; அக் கதைகளின் அடிப்படையில் சிறுகதைகள் முளைத்தன என்று சொல்லலாமேயன்றி, அவையே சிறுகதைகள் என்று கருதுவது பொருந்தாது என்பது பேராசிரியரது கருத்து.

'சிறுகதை' எனுங் கட்டுரையில், ''எல்லாச் சிறுகதைகளும் கதைகளாயினும், எல்லாக் கதைகளும் சிறுகதைகள் ஆகமாட்டா.

சிறிய அளவினவாகிய கதைகளே சிறுகதைகள் எனச் சொல்லத்தக்க ஓர் அம்சத்தைப் பெறுகின்றன. அளவு என்ற ஒன்றே சிறுகதைக்கு இலக்கணம் அன்றாயினும், அளவும் ஓர் இலக்கணம். இரண்டாயிரம் சொற்கள் முதல் மூவாயிரம் சொற்கள் வரை அமைந்த எல்லையில் சிறுகதைகள் எழுதப்படவேண்டும் என்பது அறிஞர் சிலர் நம்பிக்கை. கால்மணி நேரத்திலோ அரைமணி நேரத்திலோ ஒருமூச்சிற் படித்து விடக் கூடியதாகச் சிறுகதை இருத்தல் வேண்டும் என்பது எதிர் பார்க்கப்படுகிறது'' என்றும், ஐந்து அல்லது ஆறு பக்கத்தில் ஒரு கதை அமைந்துவிட்டால் மாத்திரம் சிறுகதை ஆகிவிடாது. கதையில் வருகின்ற பாத்திரங்கள் சில சூழ்நிலைகளில் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள், எவ்வாறு பேசுகிறார்கள் என்பது சிறப்பாகக் கவனிக்கப்படும். அப்பாத்திரங்கள் உயிருள்ள பாத்திரங்கள் போலவே அடிப்படையில் காட்சியளித்தல் வேண்டும்'' (வீட்டுத் திருமகள் பக். 66-67) என்றும் பல நுண்கூறுகளை மேனாட்டார் கருத்துக்களையொட்டி எழுதிச் செல்கிறார் பேராசிரியர். புதினத்திற்கும் சிறுகதைக்குமுள்ள வேற்றுமையை எடுத்துக் காட்டுகையில், 'புதினங்களில் பல பாத்திரங்கள் வருணிக்கப்படுவார்கள்; ஒருவரே பல்வேறு வகைப்பட்டவராகவும் காட்டப்படுவார். ஆனால், சிறுகதைகளில் சில ஆட்களே ஒரு சூழ்நிலையில் எவ்வாறு பழகுகிறார்கள், எவ்வாறு பேசுகிறார்கள் என்பது காட்டப்படும் (மேலது பக். 69) என்கிறார். 'தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்' எனும்நூலில், ''புதினங்கள் ஒய்வுள்ள பணக்காரர்கள் சாவகாசமாகச் சுவைத்து உண்ணும் பெருவிருந்து போன்றவை. சிறுகதைகளோ சுறுசுறுப்பான வேலைக் காரர்கள் தின்னும் நேந்திரங்காய் வறுவல் போன்றவை. புதினங்கள் தயிர்ச்சோறு என்றால் சிறுகதைகள் தயிர்ப் பச்சடி என்னலாம். புதினங்கள் நாரால் சேர்க்கப்பட்ட பூமாலைக்கு ஒப்பிடலாம் என்றால், சிறுகதையை அழகிய பூவிற்கு ஒப்பிடலாம். புதினங்கள் படித்து முடித்த பிறகு தம் அளவில் திருப்தி நல்கும். சிறுகதைகளோ வாசகர்களுடைய உள்ளத்தைக் கிளறிவிடும்'' (பக். 3) என்று சுவையாக எழுதிச் செல்கிறார். இவ்வாறாகப் பல செய்திகளைத் தருதலால் சிறுகதை என்பது என்ன, அஃது எப்படி யிருக்கவேண்டும் என்பது பலருக்குப் புரியலாகும்.

முறையான—இலக்கண வழிபட்ட—சிறுகதைகளை முதற்கண் உருவாக்கிய பெருமை ஆங்கிலேயர்களுக்கு உண்டு. ஆங்கில

மொழியில் ஏராளமான சிறுகதைகள் வெளிவந்தன என்பது உண்மையே; எனினும், ஆங்கிலச் சிறுகதைகளைப் பற்றி ஆய்ந்து எழுதிய பேரிபெயின் என்பவர் நல்ல உயரிய ஆங்கிலச் சிறு கதைகள் அவர் காலத்திலே பத்துக்குமேல் இல்லை எனக் குறிப்பிட் டுள்ளார். இதனால் இலக்கணத்துக்குட்பட்ட தரமான சிறுகதை களை உருவாக்குவதென்பது மிகக் கடினமான காரியம் எனக் கருது கிறார் பேராசிரியர். இந்நிலையில் தமிழ்நாட்டு எழுத்தாளர்கள் உலகளாவிய சிறுகதை யிலக்கணங்களை மனத்தகத்தே கொண்டு, மிகத் தரமான சிறுகதைகளைப் படைத்துப் புகழ்பெற வேண்டு மென்று அவாவுகிறார்; அதற்கேற்பச் சில ஆக்கக் குறிப்புக்களை வழங்குகிறார்.

சிறுகதைக்குரிய உள்ளடக்கம் அல்லது பொருள் பற்றிச் சிந்தித்து எழுதுகையில், 'சிறுகதை எழுத்தாளர்கள் உலகத்திலுள்ள எழுதப் பொருளைக் குறித்து வேண்டுமானாலும் எழுதலாம். ஆயினும் மிக்க சிக்கலான செய்திகளைச் சிறுகதையில் விலக்குதல் நல்லது. ஒரு குறிப்பிட்ட பாத்திரத்தின் குணஇயல்பினை எடுத்துக் காட்டுதல், தமமுடைய அனுபவத்தின் கூறு ஒன்று, உலக வாழ்க்கையில் ஒரு கூறு, நீதிச் செய்தி ஒன்று, மனத்தை உருக்கும் காட்சி ஒன்று, நாடகம் போல நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்று, ஒவ்வொன்றிற்குத் தொடர்புடையனவாக நிகழ்ந்துவிட்ட தொடர் நிகழ்ச்சிகள் ஆகிய இவை போன்ற எதுவும் சிறுகதை எழுத்தாளர் களுக்கு உரிய பொருளாக அமைதல் கூடும். சில வேளைகளில், ஒரு சிறுகதையில் அமைந்த செய்தியே ஒரு நெடுங்கதைக்கு விதைக்கப்பட்ட வித்துப்போல இருந்தாலும் இருத்தல் இயலும்' (பக். 4) என்று குறிப்பிடுகிறார்.

சிறுகதைக் கலையின் சிறப்பு, ஏதாவது ஒன்றினைத் தொட்டுக் காட்டிப் பல கருத்துக்களைக் குறிப்பால் எழுப்புவதில் அடங்கி யுள்ளது என்பதும், ஓவியம் வல்லவன் சில கீறல்களால் சில நிமிடத்தில் தீட்டிவிட்ட ஒரு முகம் போன்றது சிறுகதை என்பதும் மனங்கொள்ளத் தக்கவையாகும்.

பொதுவாக, இலக்கியம் நம்மை மகிழ்விக்கச் செய்து, அறிவுரையும் ஈனுவதோடு நின்று விடாமல், நம் ஆத்ம சக்தியை எழுப்பவேண்டும் என்பர். சிறுகதையும் இலக்கிய வகைகளில்

ஒன்றாதலின், இப்பண்பினைச் சில சிறுகதைகளிலும் எதிர்பார்ப்பது குறையாக மாட்டாது எனக் கருதி, மகாகவி சுப்பிரமணிய பாரதியார், இராசகோபாலாச்சாரியார், கு. ப. ரா. போன்றோர் எழுதியுள்ள சிறுகதைகளைப் பயிலுமாறு குறிப்பிடுகிறார்.

சிறந்த உள்ளடக்கங் கொண்டு கவர்ச்சியோடும் விறுவிறுப் போடும் எழுதப்படும் சிறுகதைகள் சமுதாயத்தில் பெருமதிப்பினைப் பெறும். இந்த நோக்கில், சிறுகதை எழுதும் முறை, பாத்திரங்கள், நடை, தமிழில் சிறுகதைகள் முதலியவை பற்றிப் பேராசிரியர் எழுதி யுள்ளதைப் பயின்றால், இவருக்குச் சிறுகதை யெழுதும் ஆற்றல் உண்டா எனக் கேள்வியெழலாம். படைப்பாற்றல் வேறு, திறனாய்வு வேறு என்பதை யாவரும் உணர்வர். தமக்கும் சிறுகதை எழுதத் தெரியும் என்பதற்காகக் 'குற்றம் இல்லை' (வீட்டுத் திருமகள்) எனும் சிறுகதை யெழுதியுள்ளார். இவரது எழுத்தாற்றலும் பேச்சாற்றலும் பல துறைகளுக்குத் தேவைப்பட்டமையின் சிறுகதை களை எழுதுவதில் நாட்டத்தை மிகுவித்துக் கொள்ளவில்லை யெனலாம்.

நாட்டுப்புறவியற் சிந்தனை

ஒரு நாட்டுப் பண்பாட்டுக் கூறுகள் சிற்றூர்ப் புறங்களிலே காணலாம் என்பது அறிஞர் பலரின் கருத்து. கிராமப் புறங்களின் வளம் நாட்டு வளத்துக்கு ஆக்கந்தரும் என்பதால் கிராமப்புற வளர்ச்சியில் பெரிதும் நாட்டஞ் செலுத்தி வந்தார் காந்தியடிகள்; இது யாவரும் அறிந்ததே. தமிழ்நாட்டுப் பண்பாட்டுக் கூறுகள் சிற்றூர்ப்புறங்களிலே நிலவக் காணலாம் என்பது செந்தமிழ்க் காவலரின் நம்பிக்கை. எனவே, நாட்டுப்புறவியற் சார்பில் நாட்டுப் பாடல்களை எடுத்துக் காட்டிப் பல ஆக்கக் குறிப்புக்களை வாய்ப்பு நேரும்போதெல்லாம் சொல்லியும் எழுதியும் வந்துள்ளார். எடுத்துக்காட்டாக 'நாட்டுப் பாடல்கள்' (முன்பனிக் காலம்) எனும் அவர்தம் கட்டுரையைக் காணலாம்.

அக்கட்டுரையில், 'நாட்டுப் பாடல்களில் ஒரு நாட்டினரின் சிறந்த கருத்துக்களிற் சில விளங்கப்பெறுதல் இயல்பு. முற்காலத்தில் எழுந்த நாட்டுப் பாடல்கள் பொருள் நிரம்ப இல்லாதனவாய், எப்படியாவது அந்நேரத்துத் துன்பத்தைப் போக்கக் கூடியனவாக

இருந்திருக்கும். உதாரணமாகக், கடுமையான வேலை செய்கிற மக்கள் அக்கடுமையினின்று விடுபடுவதற்காகச் சில சொற்களைத் திரும்பத் திரும்பக் கூறிப் பாடுவது உண்டு. வேலையினது கடுமை தெரியாமல் இருக்கும் பொருட்டு, நாற்று நடுகின்ற பெண்டிர், சாந்து அரைக்கும் மகளிர், கல்லுடைக்கின்ற ஆட்கள், ஏற்றம் இறைக்கும் பேர்கள், இவர்கள் சில ஒலிகளை ஒருசேர எழுப்பிக் களைப்பினைப் போக்கிக் கொள்வதை நாம் கண்கூடாகக் காண் கிறோம். அப்பாடல்களைத் திரட்டி வெளியீடுவது விரும்பத்தக்கது. அப்பாடல்கள் சிலவற்றில் அருங்கருத்துக்கள் சில இருத்தல் கூடும்' என்று 1951ஆம் ஆண்டிலே தம் கருத்தினை வெளியிட்டார். இவர் கூறிய கருத்துக்கள் தமிழர்கள் நெஞ்சத்தில் பதிந்தமையால், நாட்டுப்புறவியலுக்கு மேலும் ஊக்கந் தரப்பட்டது. நாட்டுப்புறப் பாடல்களை மேலும் தொகுக்கவும், முறையாக அவற்றில் நாட்டஞ் செலுத்தி ஆராய்ச்சி மேற்கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டது எனலாம்.

நாட்டுப்புறப் பாடல்களைப் பொறுத்தவரையில் மக்கள் மிக விழிப்பாக இருக்க வேண்டிய சூழலையும் பேராசிரியர் கோடிட்டுக் காட்டுகிறார். 'சில சமயங்களில், நாட்டுப் பாடல்களைக் கேட்பதாக நம்பி நாம் ஏமாறுவதும் உண்டு. சில மாட்டுக்காரப் பையன்களை யும், நாற்று நடுகிற பெண்டிரையும், பாடச் சொல்லிப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும். சில வேளைகளில், அவர்கள் சினிமாப் பாட்டுக்களையே பாடிவிடுவதைக் காணலாம்! காரணம் என்ன வென்றால், நகரங்களில் வாழ்கிற மக்கள் நடுவிலுள்ள இவர்கள் நாளடைவிற் பழைய பாட்டுக்களை விட்டுவிட்டுபுதியப் பாடல்களை கற்றுக் கொண்டுவிடுகிறார்கள் என்பதே. தற்கால உலக நிலை மையில், கிராமங்களில்தான் பழைய நாட்டுப் பாடல்களைக் கேட்க முடியும்; நகரங்களில் அவை குறைந்து வருவது எல்லோரும் அறிந்த செய்தி'' எனக் கூறி, இவ்வாறான நிலைக்குக் காரணங் களை யெல்லாம் சுட்டிக் காட்டுகிறார் பேராசிரியர். மேலும், நாட்டுப் பாடல்களையும், நாட்டுக் கதைப் பாடல்களையும் படித் துய்க்குமாறு தூண்டும் அவர், அல்லியரசாணி மாலை, பவளக் கொடி மாலை, புலந்திரன் களவு, புலந்திரன் தூது முதலியவற்றி லிருந்து சுவையான பகுதிகளைச் சுட்டிக்காட்டி ஆராய்ச்சிநோக்கில் எழுதிச் செல்வது சுவை பயப்பதாகும்.

பழநியிலுள்ள பள்ளர்கள் பற்றிய செய்திகளைக் கூறுவது

'வையாபுரிப் பள்ளு' ; இதனைத் தலைப்பாகக் கொண்டு இவர் தீட்டிய கட்டுரை (முன்பனிக் காலம்) நாட்டுப் புறவியற் சார்பில் காணத் தக்கதாகும்.

'செங்கோல் வேந்தர்' எனும் நூலில் காணலாகும் 'பழமொழிகள்' எனுங் கட்டுரையும் நாட்டுப்புறவியல் தொடர்பில் அமைந்துள்ளது எனலாம். பழமொழிகளுள் சில இலக்கியத்தரங் கொண்டவையாக இருப்பினும், பொதுவாகப் பழமொழிகள் நாட்டுப் புறவியலைச் சார்ந்தவையே.

பழமொழிகள் எப்படி எழுந்திருக்கக் கூடும் என வினவிய நிலையில் விடை காண முற்படுகிறார் பேராசிரியர். ''முற்காலத்திலே ஒரு சிலர் சிற்சில அனுபவங்களை அடைந்தார்களாகவும், அவ் வனுபவங்களின் பயனை உடனிருப்போரும் அறியும் பொருட்டு அடிக்கடி அவர்கள் பலரிடை அவற்றைக்கூறி இருத்தல் வேண்டும். இத்தகைய மொழிகளைக் கேட்டுக்கேட்டுப் பலர் காது தொளைக்கப் பட்டிருக்கும். அதன் பின் அப்பலரும் வேறு பலரிடையே, சமயம் வாய்ப்புழியெல்லாம் அவற்றைச் சொல்லிச் சொல்லி வந்திருக்க வேண்டும். இவ்வாறு கேட்ட மொழிகளைப் பெரியோர் சிறியோர்க் கும், பெற்றோர் மக்களுக்கும், ஆசிரியர் மாணவர்க்குமாக அடிக்கடி அறிவுறுத்தி வந்திருக்க வேண்டும். அறிவிக்க அறிந்த சிறியோரும் மக்களும், மாணவரும் நாளடைவில் அம்மொழிகளைத் தம்முள்ளே யும் அறிவித்தவர்களிடையேயும் வழங்கி வந்திருக்க வேண்டும். இங்ஙனமாகத் தான் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொருவரது அனுபவத்தின் பயனாய் எழுந்த ஒவ்வொரு மொழியும் காது செவிடு பட்ட பிறர்க்குச் சொல்லப்பட்டு நாளடைவில் பழமொழி என்ற பெருமையை அடைந்திருக்க வேண்டும்'' என விளக்கமாக எழுதிச் செல்வது சிந்திக்கத் தக்கதாகும். பழமொழிகள் பற்றி அவர் குறிப்பிடுங் கருத்துக்களிலிருந்து தமிழ்ப் பண்பாட்டு நுண்கூறுகள் சிலவற்றை அறியுமாறு செய்தல், அவரது எழுத்தாற்றலுக்குச் சிறந்த சான்றாக அமைந்துள்ளது எனலாம்.

இலக்கிய மரபு பற்றிய சிந்தனை

'மரபும் இலக்கிய வளர்ச்சியும்' (முன்பனிக் காலம்) எனுங் கட்டுரையில் இலக்கிய மரபுகள் சிலவற்றை அலசி ஆராய்ந்துள்

ளார் பேராசிரியர். மக்களின் சலிப்புணர்வை நீக்கும்வகையிலும் புலவர்களின் புதுப்புதுக் கற்பனைகள் இலக்கியத்தில் இடங் கொள்ளும்வகையிலும் இலக்கிய மரபுகள் காலத்திற்கேற்ப அமைகின்றன என்பது அவர்தம் கருத்து.

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவெனக் கொள்ளுதல் தகாது. பொருந்தாத மரபுகள் காலப்போக்கில் விடப்படலாம். இது காரணமாக இலக்கிய மரபுகளை எதிர்த்துத் தள்ளிப் புறக்கணித்துத்தான் இலக்கியம் செய்ய வேண்டுமென வலியமுயலுவதும் பொருந்தாது என்கிறார்.

இலக்கியத்தில் உவமைகள் சொற்கள் முதலானவற்றைக் கையாள்கையில் புலவர்கள் காலந்தோறும் புதுமைக்கூறுகளுக்கு ஓரளவு இடந்தந்தே வந்துள்ளனர்; கருத்து அடிப்படையிலும் மரபுகளைச் சிற்சில இடங்களில் கைவிட்டுப் புதுமைகளைக் காண முயன்றுள்ளனர். இவற்றையெல்லாம் பேராசிரியர் விரிவாகச் சிந்தித்துள்ளார்; அவற்றுட் சில காண்போம்.

கடலன்ன காமத்தில் உழன்றாலும் மகளிர் அதனைத்தாமே வெளிப்படுத்துவது மரபன்று என்பது திருக்குறள் தருங் குறிப் பாகும். ஆனால், இராமாயணத்தில் வரும் சூர்ப்பணகை போன்ற அரக்கியரிடத்து இம்மரபு செல்லாது என்பதைக் கருதியே கம்பர் மாற்றஞ்செய்துள்ளார். அஃதாவது, சூர்ப்பணகை இராமனிடம் தன் காதலைத் தானே வெளிப்படுத்தினாள் என்பதைத்,

> 'தாமுறு காமத் தன்மை தாங்களே உரைப்பதென்பது
> ஆமென லாவ தன்றால் அருங்குல மகளிர்க் கம்மா!
> ஏமுறும் உயிர்க்கு நோவேன்! என்செய்கேன்? யாரும் இல்லேன்
> காமன்என் றொருவன் செய்யும் வன்மையைக் காத்தி என்றாள்'
>
> (3 : 5,45)

எனவரும் பாடலால் புலப்படுத்தியுள்ளார். இதனை ஆராய்கை யில் ''இப்படிக் கூறுகிற இடத்திலும் பெண்மரபுக்கு மாறுபடச் சூர்ப்பணகை பேசினாலும், சொல்லுகின்ற சொல்லின்கண்ணே அவள் பெண்மை காணப்படுகின்றது எனக்காட்டுவார் போன்று, கம்பர்,

'தாமுறு காமத் தன்மை தாங்களே உரைப்ப தென்பது
ஆமென லாவ தன்றால் அருங்குல மகளிர்க் கம்மா'

என நீட்டி வளர்த்தி உரைத்துள்ளார். நல்ல பெண்கள் காமத்தைத்தாமே உரையார் என்பதுதானே கருத்து? அதைச் சொல்லக் 'காமம்' என வேண்டிய இடத்தில் 'காமத்தன்மை' என்றும், 'தாங்களே உரையார்' என வேண்டிய இடத்தில் 'தாங்களே உரைப்பதென்பது ஆமெனலாவதன்றால்' என்றும், நீட்டி வளர்த்தியிருப்பதிலேயே இம்மரபு பேணப்படாது பேணப் பட்டிருக்கிறது. 'அருங்குல மகளிர்க்கு ஒவ்வாததைச் சொல்கிறேனே, இஃதென்ன விந்தை' என்பாள் போலச் சூர்ப்பணகை, 'அருங்குல மகளிர்க்கு அம்மா' எனக் கூறினதாகவே கம்பர் காட்டினார்'' என்கிறார்.

மேலும், மரபைக் கடந்து செல்ல விரும்பிய மகாகவி பாரதியார் தம் குயில்பாட்டில், பெண்குயிலொன்று ஆண் குரங்கிடத்தும் காளை மாட்டிடத்தும் தன் காதலை வெளிப்படக் கூறுவதாக அமைந்துள்ளதை நினைவுபடுத்துகிறார். காளையைப் பார்த்துக்குயில்,

'காளை யெருதரே காட்டிலுயர் வீரரே
தாளைச் சரணடைந்தேன் தையலெனைக் காத்தருள்வீர்!
காதலுற்று வாடுகின்றேன் காதலுற்ற செய்தியினை
மாத ருரைத்தல் வழக்கமில்லை யென்றறிவேன்
ஆனா லென்போல் அபூர்வமாங் காதல் கொண்டால்
தானா உரைத்தலன்றிச் சாரும் வழியுளதோ?
....
ஆசைதான் வெட்க மறியுமோ?'

என நேசவுரை பகர்வதை எடுத்துக் காட்டுகிறார் பேராசிரியர்.

மக்களினத்தில் காதலரும்பத் தலைமக்களுக்கு ஒப்புமைப் பண்புகள் இருத்தல் வேண்டும். அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி எனும் நாற்குணம் படைத்த நம்பியொருவன் நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு எனும் நாற்குணமுடைய நங்கையைக் காதலித்து மணந்தான் என்பது பண்டுதொட்டுவரும் ஒரு மரபாகும். இந்தக் கருத்தில் சலிப்பு ஏற்படாத காலத்தில், கடவுளை ஆன்மா நேசிக்கின்றது

என்று சொல்லும்பொழுது நாயகன் நாயகி நிலையில் வைத்து ஓதினார்கள்; இஃது ஒருவகை மாற்றம், இவ்வாறான செய்திகளை யெல்லாம் பாடி அலுத்துப்போன காலத்தில், பாரதியார் குயில் பாட்டைப் பாடினார் என்பதையும், பாரதிதாசன் விதவைத் திருமணத்தை மையமாக வைத்து 'மாந்தோப்பில் மணம்' எனுங் கவிதையைப் பாடினார் என்பதையும் எடுத்துக் காட்டுகிறார்.

யாப்பு நோக்கில், செய்யுளிலக்கியம் படைக்க முதலில் நால் வகைப் பாக்களும், பிறகு பாவினங்களும் தோன்றின. காலப் போக்கில் தோன்றிய பாட்டியல் நூல்களினால், அந்தணரை வெண்பாவினாலும், அரசரைஆசிரியப்பாவினாலும், வணிகரை கலிப்பாவினாலும், வேளாளரை வஞ்சிப்பாவினாலும் பாட வேண்டுமென விதிகள் வகுக்கப்பட்டன. ஆனால், சங்க காலத்தில் இன்ன வகுப்பினருக்கு இன்ன பா உரியது என்ற மரபு இல்லை என்பதனைச் சான்றுகளால் வலியுறுத்துகிறார்; இடைக் காலத்தில் தோன்றிய அம்மரபு சில நூற்றாண்டுகள் பாதுகாக்கப்பட்டு இப்பொழுது பெரும்பாலும் பேணப்படுவதில்லை யென்பதையும் குறிப்பிட்டுச் செல்கிறார் செந்தமிழ்க் காவலர்.

தலைச்சங்க காலத்துப் பரிபாடல்கள் காமம் பற்றியனவாக இருந்திருக்கலாம். கடைச்சங்க காலத்திலே கடவுளைப் பற்றியும் ஆற்றைப் பற்றியும் ஊரைப் பற்றியும் பாடுதற்குப் பரிபாடல்கள் பயன்பட்டமையால் இலக்கிய மரபினின்றும் அக்காலப் புலவர்களே பெயரத் தலைப்பட்டனர் எனக் கூறிக் காட்டுகிறார்.

மக்களின் தேவையைப் பொறுத்தும், காலத்தின் போக்கிற் கேற்பவும் தவிர்க்கவியலாத சூழல்கள் காரணமாகச் சில இலக்கிய மரபுகளில் மாற்றம் நிகழலாம்; அதனாலும் இலக்கிய வளர்ச்சி யேற்படலாம் என்பது பேராசிரியரின் உட்கிடையாகும்.

தம் 'தமிழ் யாப்பின் உயராய்வு' (Advanced Studies in Tamil Prosody) எனும் ஆய்வேட்டில், தமிழிலக்கியப் பரப்பிலே பல் வேறு காலங்களில் தோன்றிய நூல்களைத் துணையாகக் கொண்டு பாட்டியற் கொள்கைகள் பொருத்தமுடையனவா என ஆய்ந்து குறிப்பிட்டுள்ளார். எழுத்துக்குப் பாற்பொருத்தமும் உயர்வு தாழ்வும், பாவுக்கும் பாவினத்திற்கும் வருணப்பொருத்தமும் உயர்வு தாழ்வும் கற்பிப்பது செயற்கையானவை என்பதும், பாட்டியல் நூலால் செய்யுளியற்றுவார்க்கு விதிக்கப்பட்ட பத்து வகைப் பொருத்தங்கள் (மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உண்டி, வருணம், நாள், கதி, கணம்) தமிழ் மரபிற்கும் பண்பாட்டிற்கும் ஒவ்வாதவை என்பதும், முற்கால யாப்பு நூல்களைவிட முன்னேற்றம் உணர்த்து வதாகப் பன்னிரு பாட்டியலைக் கருதவியலாது (To put it briefly, we might say that Panniru pattiyal does not represent any improvement upon the older prosodies but it has done great violence to the genius of the Tamil language-AdVanced studies in Tamil Prosody, P.194)என்பதும் அவர்தம் ஆய்வால் புலப்படும் செய்திகள் எனலாம்.

மொழியியற் சிந்தனை

அறிஞர் சிதம்பரநாதனாருக்கு அமைந்த இலக்கிய ஈடுபாடும் மொழியியல் ஈடுபாடும் தனித்தன்மை வாய்ந்தவை; அதனால், தமிழ் மக்கள் பெற்ற பயன்கள் மிகுதியேயாகும்.

பொதுவாகச் சமுதாயத்தில் பழகும் மனிதன் தன் எண்ணத் தைப் பிறர்க்குத் தெரிவிக்கவும், பிறர் கருத்தைத் தான் புரிந்து கொள்ளவும் பயன்படுகின்ற கருவியாக மொழியை மதிக்கிறான் எனலாம். தெளிவாக மொழி என்றால் என்ன எனும் வினா

விற்கு விடைகாணும் வகையிலே அறிஞர் பலரின் சாரமான கருத்துக்களைத் தெரிவிக்கிறார் பேராசிரியர். ''மொழி என்பது மனிதனுடைய சமுதாய நடவடிக்கைகளின் சிறந்த கூறு'' என்பர் பேரறிஞர் கிளீசன் (H. A. Gleason) என்றும், ''மொழி மனிதன் தன் உட்கிடக்கையைத் தெரிவிப்பதற்கு உரிய பல கருவிகளில் தலையாயது'' என்பர் வாட்மௌ (Whatmough) என்றும், ''எண்ணுதற்கு மொழி வாகனம் போலப் பயன்படுகிறது'' என்பர் மாக்சு முல்லர் (Max Muller) என்றும், ''மொழி பிறருடைய எண்ணங்களைத் தொடுதற்கும் பாதிப்பதற்கும் உரிய கருவியாகப் பயன்படுகிறது'' என்பர் விட்னி (Whitney) என்றும், ''மனிதன் விலங்கு வகையினின்று மேலோங்கி வந்த காலை இயல்பாகவே மொழி எழுந்துவிட்டது'' என்பர் டார்வின் (Darwin) என்றும் எடுத்துக்கூறி, அவற்றிற்கு விளக்கங்களும் தந்துள்ளார்.

'வீட்டுத் திருமகள்' எனும் நூலில் சில கட்டுரைகளும், 'செங்கோல் வேந்தர்' எனும் நூலில் சில கட்டுரைகளும் மொழியியல் பற்றியவை. அவற்றில், மொழிகளின் இயல்பு, கிளை மொழிகள், வேர்ச் சொற்கள், அகராதிச் சொற்கள், ஒலியியல், ஒலியனியல், சொல்லியல், சொற்பொருளியல், ஒப்பியல் முதலியவை பற்றிய அருங்குறிப்புக்களைக் காணலாம்.

ஆராய்ச்சியிதழ்களில் தமிழிலும் ஆங்கிலத்திலும் மொழியியல் தொடர்பான கட்டுரைகள் எழுதியுள்ளார் என்பது பலரும் அறிந்த செய்தி. தமிழ்முதுகலை வகுப்பிற்கு மொழி வரலாறும் ஒப்பிலக்கணமும் பாடமாக நடத்துதற்கு நல்வாய்ப்பாகப் பேராசிரியர் தமிழிலக்கண நூல்களையும் தேர்ந்த ஆங்கிலமொழியியல் நூல்களையும் நன்றாகப் பயின்றிருந்தார் என்பது அவர்தம் மாணவர்கள் ஆர்வமுடன் உணர்ந்த செய்தி.

முடிப்புரை

செந்தமிழ்க் காவலர் சிதம்பரநாதனார் தம் வாழ்வியலில் வாய்மையறந்தாங்கி, உயர்ந்த சிந்தனைகளுடனும் பெரும் புலமையுடனும் தமிழுக்கும் தமிழினத்திற்கும் சிறப்பாகத் தமிழ்ப் புலவரேற்றத்திற்கும் தமிழ்ப்பண்பாட்டிற்கும் தொண்டாற்ற வேண்டுமென்று இலட்சியப்பயணம் மேற்கொண்டார். அக் குறிக்கோட் செலவின் வெற்றி, அவர் சிந்தனைகளை நன்குணர்ந்து செயற்படுத்துவதில் தான் உள்ளது. தமிழ்நாடு அந்த வெற்றியைப் பெற்றுத் தன்னை உயர்த்திக் கொள்வதாக. வாழிய செந்தமிழ்க் காவலர் புகழ்!

உனக்குப் பணிசெய்ய உன்றனை நாளும்
நினைக்க வரமெனக்கு நீதா - மனக்கவலை
நீக்குகின்ற நற்குடந்தை நின்மலனே என்வாழ்வை
ஆக்குஞ் சிதம்பரநா தா

132983

3A / 8-79